# உதயன்

புதன் பொம்மை உள்ளே...

சுடர் : 37 | கதிர் : 334
புதன்கிழமை 26 ஒக்ரோபர் 2022
ஐப்பசி 09 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16 | விலை : ரூ. 50




# தமிழர்களின் தீர்வுக்கு அரிய சந்தர்ப்பம் இது

## தவறவிட வேண்டாம் என்று பிரதமர் தினேஷ் வலியுறுத்து

கொழும்பு, ஒக்ரோபர் 26

தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு இது அரிய சந்தர்ப்பம். கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் தவறவிடக்கூடாது - இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

16

## பிரிட்டன் பிரதமரானார் ரிஷி சுனக்!

*50 நாள்களில் 3 பிரதமர்கள்*

லண்டன், ஒக். 26

பிரிட்டன் பிரதமராக நேற்றுப் பதவியேற்றார், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரான ரிஷி சுனக். இந்தப்

16

## யாழ்ப்பாணம் வருகின்றார் ரணிலின் மனைவி!

கொழும்பு, ஒக். 26

நாட்டின் முதல் பெண்மணியும், களனிப் பல்கலைக்கழக ஆங்கிலத் துறையின் சிரேஷ்ட பேராசிரியரும், பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தில்

16

## ஹெரோய்னுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 26

வேலணை அம்பிகைநகர் பகுதியில் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளுடன் நபரொருவர்

14

## மாணவர்கள் இடைவிலகலை தடுக்கத் திட்டங்கள் இல்லை!

### அரசாங்கத்தை விளாசுகின்றார் ஆசிரியர் சங்க பொதுச் செயலர்

யாழ்ப்பாணம், ஒக். 26

மாணவர் இடைவிலகலை தடுப்பதற்கு இந்த அரசாங்கத்திடம் திட்டங்கள் எதுவும் இல்லை என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். மாணவர் இடைவிலகல் அதிகரித்துள்ளதாக உதயனின் நேற்றைய பதிப்பில் வெளியான செய்திக்குப் பதிலளிக்கும்போதே அவர்

15

## கிணற்றில் பலியான இளைஞர்களின் உடலில் ஐஸ்போதை, மதுசாரம்!

### உடற்கூற்றுப் பரிசோதனையில் கண்டறிவு

யாழ்ப்பாணம், ஒக். 26

பருத்தித்துறை - புலோலி சிங்க நகர் பகுதியில் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட இரு

15

## போதைமாத்திரை கொள்வனவு மருத்துவர்களை விசாரிக்கக் குழு

வவுனியா, ஒக். 26

வவுனியாவில் போதை மாத்திரைகளைக் கொள்வனவு செய்ததாகக் கூறப்படும் தனியார் மருத்துவமனை மற்றும் மருத்துவர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்

14



சூரிய கிரகணமான நேற்று, யாழ்ப்பாணத்திலிருந்து அதை வெறுங் கண்களால் அவதானிக்க முடிந்தது. நேற்று மாலை 5.27 மணி முதல் தென்பட்ட இந்தச் சூரிய கிரகணத்தைக் காண்பதற்குப் பலரும் ஆர்வம் காட்டினார்கள். (அ-ம-20-27)

## அரசியல்கைதிகள் மூவர் விடுதலை!

விரிவு - பக். 15

## அரசியல்கைதிகள் மேலும் சிலர் பொங்கலை முன்னிட்டு விடுவிப்பு

### மனோ கணேசனிடம் ஜனாதிபதி உறுதி

கொழும்பு, ஒக். 26

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் 8 அரசியல் கைதிகள் அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் மேலும் சில அரசியல்கைதிகள் பொங்கல் பண்டிகையை முன்னிட்டும் விடுவிக்கப்படவுள்ளனர் என்று ஜனாதிபதி ரணில் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனிடம் தெரிவித்துள்ளார்.

(தொடர்புடைய செய்தி பக்கம் 5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் வரிக்கொள்கையால் நிபுணர்கள் புலம்பெயர்வு

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஒக்.26**

**சர்வதேச நாணயநிதியத்தின் கொள்கை மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் புதிய வரிக்கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதால் தொழில்சார் நிபுணர்கள் புலம்பெயர்வது அதிகரித்துள்ளது. இதனால் சுகாதாரத் துறையும் ஏனைய துறைகளும் மோசமாக பாதிக்கப்படலாம்.**

இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்தச் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளதாவது:-

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கை மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இந்த வரிக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப் பட்டன என்பதில் மறைப்பதற்கு எதுவுமில்லை. அது தெளிவான விடயம். இல்லாவிட்டால் அரசாங்கம் பெரும் தவறை செய்யுமா?

இந்தத் தீர்மானங்கள் காரணமாக எவ்வாறான ஆர்ப்பாட்டங்களை சந்திக்க நேரும் என்பது அரசாங்கத்துக்குத் தெரியும். வரிக் கொள்கைகளை ஆராய்ந்தவர்கள் சர்வதேச நாணய நிதியத்தின் அழுத்தங்கள் காரணமாகவே இந்தக் கொள்கைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்துகின்றது எனத் தெரிவித்துள்ளனர். இந்த வரிக் கொள்கைகள் காரணமாக நாடு கற்காலத்துக்கே செல்கின்றது. மருத்துவர்கள், பொறியியலாளர்கள் உட்பட பல துறைகளைச் சேர்ந்தவர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். வடக்கு - கிழக்கு மற்றும் நாட்டின் தென்பகுதியில் உள்ள அரசாங்க மருத்துவமனைகளில் இந்த நிலை காணப்படுகின்றது. பல மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர்.

இதனால் பல மருத்துவமனைகள் மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. தொழில்சார் நிபுணர்களின் குடும்பங்களுக்கு அவர்கள் நாட்டிலிருந்து வெளியேறுவதே சிறந்த முடிவாக உள்ளது - என்றார். (ஏ)



# காகத்தின் அரசியல் நிறைவுக்கு வந்தது

## பஸிலை சாடுகின்றார் உதய கம்மன்பில

கொழும்பு, ஒக். 26

நாடாளுமன்ற உறுப்பினர்களை பொம்மைகளைப் போன்று ஆட்டி வைக்கும் யுகம் நிறைவுக்கு வந்துள்ளது. அத்தோடு காகத்தின் அரசியல் யுகமும் நிறைவுக்கு வந்துள்ளது. தற்போது காகத்தின் குறைகளைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் யுகத்தையும் நிறைவுக்கு கொண்டு வந்து, முன்னோக்கிச் செல்ல வேண்டும்- இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் விரைவில் கிடைக்கப்பெறும் என்று அரசாங்கம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கடன் வழங்குநர்களிடம் பேச்சுக்களை முன்னெடுத்த பின்னரே தம்மால் உதவ முடியும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

கடன் நெருக்கடிகளைக் குறைப்பதற்கு கடன் பெறுவது தீர்வாகாது என்பதை அரசாங்கம் உணர வேண்டும். 7 மூளைகளைக் கொண்டவர் என சித்திரிக்கப்பட்ட பஸில் ராஜபக்சவிடம் நாட்டின் நிதி நிர்வாகம் கையளிக்கப்பட்டபோது நாடு வீழ்ச்சியடைப் போகிறது என்று நாம் எச்சரித்தோம்.

அன்றிலிருந்து பஸில் ராஜபக்சவை மீண்டும் அமெரிக்காவுக்கு அனுப்பும்வரை தொடர்ந்தும் போராடிக் கொண்டிருப்போம் என்று கூறியதை இன்று நிறைவேற்றி நாடாளுமன்றத்திலிருந்து முற்றாக பஸில் ராஜபக்சவை வெளியேற்றியுள்ளோம். எனவே தற்போது காகத்தின் அரசியல் யுகம் நிறைவுக்கு வந்துள்ளது. அத்துடன் காகத்தின் குறைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் யுகத்தையும் நிறைவுக்கு கொண்டு வந்து, நெருக்கடிகளிலிருந்து நாடு முன்னோக்கிச் செல்ல வேண்டும்.- என்றார். (ஏ-14)



# மக்கள் போராட்டத்தின் பின்னணியில் ரணில்

## பொதுஜன பெரமுன கண்டுபிடிப்பு

கொழும்பு, ஒக்.26

நாட்டில் நடந்த மக்கள் போராட்டத்தின் பின்னணியில் மூன்று அணிகள் இருந்தன. அவற்றில் மூன்றாவது அணி தொடர்பான தற்போது தகவல்களை வெளியிடப் போவதில்லை.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மூன்றாம் தரப்பு சம்பந்தமான சாட்சியங்கள் என்னிடம் இல்லை. இரண்டு அணிகள் போராட்டத்தின் பின்னணியில் இருந்தன என்பதை நிச்சயமாக கூற முடியும். அதில் ஒரு தரப்பு ரணில் விக்கிரமசிங்கவின் தரப்பு என்பதுடன் அந்தப் போராட்டத்தின் வெற்றிக் கிண்ணத்தை ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே பெற்றார்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பிள்ளைகள் அறியாமலும் சிலர் அறிந்தும் ரணில் விக்கிரமசிங்க போராட்டத்தின் பின்னணியில் இருந்தார். ராஜபக்ச குடும்பத்துக்குள் ஒருவரோ அல்லது இருவரோ கோத்தாபய ராஜபக்ச அறியாமல் போராட்டத்தின் பின்னணியில் இருந்தனர்.

தனிப்பட்ட ரீதியில் ராஜபக்ச குடும்பத்தை சேர்ந்த ஒருவர் அடுத்து நாட்டின் தலைமைத்துவத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்தப் போராட்டத்தின் பின்னணியில் இருந்தார்- என்றார். (ஏ)

# பாண் நிறை அளவிடும் சோதனை பயனற்றது!

## பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.26

வெதுப்பக தொழிலில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்காமல், குறைந்த எடை கொண்ட பாண்களை கண்டறியும் வகையில் சோதனைகளை மேற்கொள்வது அர்த்தமில்லாத செயல் என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

450 கிராம் தரநிலையை வெதுப்பகங்கள் கடைப்பிடிக்கின்றனவா என்பதை கண்டறிய நுகர்வோர் விவகார அதிகாரசபை சோதனைகளை ஆரம்பித்துள்ளது.

எடை பிரச்சினைகளை சரிபார்ப்பதற்காக சுமார் 70 வெதுப்பகங்கள் சோதனை செய்யப்பட்டன. அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனால் வெதுப்பக உரிமையாளர்கள் 450 கிராம் பாணை உற்பத்தி செய்து அதற்கான செலவினங்களுக்குரிய விலையை நிர்ணயிக்க முடியும் என்று அறிவித்துள்ளோம். பாணுக்கான விலைக் கட்டுப்பாட்டு பொறிமுறை இல்லை. வெதுப்பக உரிமையாளர்களுக்கு தாங்களாகவே விற்பனை விலையை தீர்மானிக்க முடியும் என்று அறிவித்துள்ளோம். இதுபோன்ற சோதனைகளை நடத்துவது இந்தத் தொழிலுக்கு எந்த தீர்வையும் கொண்டு வராது - என்றார். (ஏ)

# கைதிகளின் உரிமைகளை மீறும் புதிய வழிகாட்டல்கள்



## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 26

சிறைச்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 94 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள புதிய வழிகாட்டல்கள், சிறைக்கைதிகளின் உரிமைகளை மீறும் வகையில் அமைந்திருக்கின்றது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும் சட்டத்தரணியுமான அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவால் கடந்த ஜூலை 12 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக சிறைச்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 94 ஆம் பிரிவின் கீழான வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டன.

அந்த வழிகாட்டல்கள் தொடர்பில் சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றின் போது சிறைச்சாலைகள் திணைக்களமானது பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு சிறைக்கைதிகளின் உரிமைகள் பலவற்றை மட்டுப்படுத்தியது.

அதன்படி சிறைக்கைதிகளைப் பார்வையிடுவதற்கான நாள்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதுடன் அவர்களுக்கு வழங்கப்படக்கூடிய உணவும் மட்டுப்படுத்தப்பட்டது. தற்போது தயாரிக்கப்பட்டுள்ள புதிய வழிகாட்டல்களை சிறைக்கைதிகளின் உரிமைகள் தொடர்பில் தற்காலிகமாகவும், உத்தியோகபூர்வமற்ற வகையிலும் விதிக்கப்பட்டிருந்த மட்டுப்பாடுகளை சட்டபூர்வமாக்குவதற்கு முன்னெடுக்கப்பட்டிருக்கும் முயற்சியாகவே எண்ணத்தோன்றுகிறது- என்றார். (ஏ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க மருத்துவமனைகளில் தொடரும் மருந்துத் தட்டுப்பாடு

**கொழும்பு, ஒக்.26**

**நாட்டில் உள்ள பெரும்பாலான அரச மருத்துவமனைகளில் 90க்கும் மேற்பட்ட அத்தியாவசிய மருந்துகளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றது என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சங்கத்தின் செயலாளர் மருத்துவ கலாநிதி ஹரித அலுத்தே தெரிவித்துள்ள தாவது:

நாட்டில் உள்ள மருத்துவமனை வலையமைப்பு மருந்துப் பற்றாக் குறை காரணமாக வீழ்ச்சியடையும் நிலை ஏற்பட்டுள்ளது. கொழும்பு நகர எல்லையில் உள்ள மாவட்ட மருத்துவமனைகள் போன்ற மருத்துவமனைகள் கூட மருந்துப் பற்றாக்குறையை எதிர்கொண்டுள் ளன. பெரசிட்டமோல், பிரிட்டோன், சேலைன் போன்ற அத்தியாவசிய மருந்துகளும் பற்றாக்குறை காணப்படுகிறது. வெப்பத் தாக்கு தலைத் தடுப்பதற்குப் பயன்படுத் தப்படும் எஸ்பிரின் போன்ற அவ சரகால மருந்துகள் கொழும்பு பொது மருத்துவமனையில் பற் றாக்குறையாக உள்ளன.

அறுவை சிகிச்சை செய்யும் போது பயன்படுத்தப்படும் மருந்து மற் றும் மருத்துவ உபகரணங்களுக் குள் பற்றாக்குறை நிலவுகிறது. நோயாளிகள் மருந்தகங்களில் மருந்துகளைப் பெற்றுக்கொள்ள மருத்துவர்களால் அறிவுறுத்தப்ப டுகிறார்கள். எனினும் தற்போது மருந்தங்களிலும் மருந்து தட்டுப் பாடு நிலவுகிறது.

நோயாளிகள் வாங்க முடியாத அளவுக்கு மருந்தகங்களில் அதிக விலைக்கு மருந்துகள் விற்பனை செய்யப்படுகின்றன. தற்போது ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாடு, மருந்துகளை வாங்க முயலும் நோயாளிகளுக்கு பெரும் நெருக் கடியாக மாறியுள்ளது. அத்தியாவ சியப் பொருள்களின் தட்டுப்பாடு காரணமாக, எக்ஸ்ரே மற்றும் ஸ்கான் பரிசோதனை போன்ற ஆய்வகங்களிலும் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன- என்றார். (எ)

# புரிதலுடன் செயற்பட்டால் பிரிவினைகள் இருக்காது!

*விதுர விக்கிரமநாயக்க கூறுகிறார்*

கொழும்பு, ஒக். 26

நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜைகளும் தமக்கிடை யில் புரிதலை ஏற்படுத்திக் கொண்டால் பிரிவினை வாதம் தோற்றம் பெறாது. ஒற்றுமையை மதத்திலும் மொழியிலும் வரையறுக்காது நாம் செயற்பட வேண்டும் என புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் ஆலயத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற் பாட்டில் இடம்பெற்ற தீபாவளி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் அனைவரும் ஒரே இனமாக மீண்டெழ வேண் டும். மறக்கப்பட்ட கலாசாரங்களை எதிர்கால சந்ததி யினருக்குக் கற்பிக்க வேண்டும். தீபாவளி தினத்தில் விளக்கேற்றுவதால் மாத்திரம் எம்மால் திருப்தி கொள்ளமுடியாது. உள்ளத்திலும் பிரகாசத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அந்தப் பிரகா சத்தை சமூகத்துக்கும் வழங்க வேண்டும்.

எமது ஒற்றுமையானது மதம் ஒன்றிலோ அல்லது பேசும் மொழியிலோ வரையறுக்கப்பட்டதாக இருக் கக்கூடாது. புரிதலுடன் அனைவரும் இணைந்து செயற்பட்டால் சுபீட்சமான நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்- என்றார். (ச-இ)

# 22ஆவது திருத்தம் மக்களின் வெற்றி

*ஐ.தே.க. கூறுகின்றது*

கொழும்பு, ஒக்.26

அரசமைப்பின் 22 ஆம் திருத்தம் மக்கள் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றியாகவே நாங்கள் காண்கின்றோம். மக்கள் மாற்றம் ஒன்றையே கோரி இருந்தனர். அந்த மாற் றத்துக்கான அடித்தளத்தை ஜனாதிபதி நிறை வேற்றி இருக்கின்றார்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி மேல்மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கித்சிறி மஞ்ச நாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறி கொத்தாவில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந் திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மக்கள் மாற்றம் ஒன்றைக் கோரியே போராட் டங்களில் ஈடுபட்டு வந்தனர். அந்த மாற் றத்தை ஏற்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க படிப்படியாக நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாடா ளுமன்றத்தில் ஓர் ஆசனமே இருக்கின்றது. பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவுட னேயே அவர் ஜனாதிபதியாகத் தெரிவாகினார். அதனால் பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவுடனேயே அனைத்து நடவடிக்கை களையும் மேற்கொள்ள வேண்டி இருக்கின் றது. அதையே தற்போது ஜனாதிபதி செய்து வருகின்றார். 22 ஆம் திருத்தம் கொண்டு வரும்போது ஆரம்பத்தில் அரசாங்கத்துக்குள் அதற்குக் கடும் எதிர்ப்பு இருந்தது. பின்னர் அந்த எதிர்ப்புகளை எல்லாம் ரணில் விக்கிர மசிங்க மிகவும் நிதானமான முறையில் வெற்றிகொண்டார்.

நாட்டில் மாற்றத்தையே மக்கள் கோரி இருந் தனர். அதற்கான அடித்தளமாகவே 22 ஆம் திருத்தம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. நாடு பொருளாதார ரீதியில் வங்குரோத்து அடைய 20 ஆம் திருத்தத்தில் ஜனாதிபதிக்கு இருந்த வரையறுக்கப்படாத அதிகாரமே காரணமா கும் - என்றார். (எ)

# பால்வினை நோய்களால் பாதிப்புறும் மாணவர்கள்



கொழும்பு, ஒக்.26

நாட்டில் பல பாடசாலை மற் றும் பல்கலைக்கழக மாண வர்கள் பால்வினை நோய் களால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது என்று தேசிய எய்ட்ஸ் எஸ்டீ கட்டுப்பாட்டு திட்டம் தெரிவித் துள்ளது. பால்வினை நோய்களால் பாதிக்கப்படும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டத்தின் இயக்குநர் மருத்துவர் ரசஞ்சலி ஹெட்டியாராச்சி தெரிவித்துள் ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

18 முதல் 30 வயதுக்குட்பட்டவர்கள் மத்தியில் நோய் தொற்று அதிகரித்துள்ளது. 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த வருடம் பாதிக்கப்பட்டுள்ளவர் களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இளைஞர்கள் "ஸ்பா"வுக்குச் செல்வது ஒரு காரணம். ஆண்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். பல யுவதி களும் பாதிக்கப்பட்டுள்ளனர்- என்றார். (எ)

# பெரமுன பிளவடைந்துள்ளதால் ராஜபக்ச ஆட்சி மீளவும் வராது

*அநுரகுமார வெளிப்படை*

கொழும்பு, ஒக். 26

மீண்டுமொரு ராஜபக்ச முகாம் நாட்டில் ஆட்சியமைக்க முடியாதளவுக்கு சிறிலங்கா பொதுஜன பெரமுன பிள வடைந்துள்ளது என்று ஜே.வி.பி யின் தலைவர் அநு ரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இன்று ஆட்சியை ஜே.வி.பி.யிடம் ஒப்படைக்க வேண் டும் என்று மக்கள் கூறுகின்றனர். கடந்த பல தசாப் தங்களாக அரசியலில் பிரதான முகாமாகக் காணப் பட்டது ராஜபக்ச குடும்பமாகும்.

ஆனால் இன்று கோத்தாபய ராஜபக்ச வீதியில் இறங்க முடியாது. தற்போது முழு ராஜபக்ச முகாமும் சிதறிப் போயுள்ளது. இந்த நிலையில் மீண்டுமொரு முறை நாட்டில் ராஜபக்ச முகாமினர் ஆட்சியை அமைக்க முடியாதளவுக்கு ராஜபக்ச ஆட்சி சிதறடிக்கப்பட்டுள் ளது- என்றார். (எ-14)

# தேர்தல் செலவின கட்டுப்பாடு சட்டமாக்குமாறு வலியுறுத்து!

கொழும்பு, ஒக்.26

தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற விரிவான திருத்தங்களின் ஆரம்ப மாக எதிர்பார்க்கப்படும் செலவினங் களை மட்டுப்படுத்துவதற்கான சட்ட மூல வரைபை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பவ்ரல் அமைப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தி யுள்ளது.

பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியா ராச்சி ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தி லேயே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:

அரசமைப்புக்கான 22 ஆவது திருத்தத்தின் ஊடாக இலங்கையில் வலுவானதொரு ஜனநாயக நிர்வாக முறையைக் கட்டியெழுப்புவதற்குக் காணப்பட்ட மிகச் சிறந்த வாய்ப்பு தவறவிடப்பட்டுள்ளது.

ஆயினும் 20 ஆவது திருத்தத்துக்கு சமாந்தரமாக ஏற்றுக்கொள்ளத்தக்க திருத்தங்களைக் கொண்டுவருவ தற்கு முன்னின்று செயற்பட்ட உங்க ளுக்கும், அதற்கு ஆதரவாக வாக் களித்த அனைத்து உறுப்பினர்க ளுக்கும் நாம் நன்றி கூறுகின்றோம். தேர்தல்முறையில் மாற்றத்தை ஏற் படுத்துவதற்கான திருத்தங்கள் தொடர்பில் உங்களால் முன்வைக் கப்பட்ட யோசனைகளில் முக்கிய மானதாகக் கருதப்படுகின்ற எதிர் பார்க்கப்படும் செலவினங்களை மட்டுப்படுத்துகின்ற சட்டத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள் ளமை வரவேற்கத்தக்க விடயமா கும்.

தேர்தல்முறை மாற்றம் தொடர்பில் நீங்கள் மேற்கொள்வதற்கு எதிர் பார்க்கின்ற விரிவான திருத்தங்க ளின் ஆரம்பமாக மேற்படி வரைபை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, அதை நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வவுனியா மாவட்டத்தையும் சீரழிக்கும் போதைப்பொருள்

## மாணவர்கள் மீது தீவிரகவனம் செலுத்துக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் வலியுறுத்து

வவுனியா, ஒக். 26

**யாழ்ப்பாண மாவட்டத்தில் உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனைகள் அதிகரித்து விபரீத விளைவுகளை ஏற்படுத்தி வரும் நிலையில் வவுனியா மாவட்டத்திலும் மாணவர்களிடையே போதைப் பொருள் பாவனை வேகமாக அதிகரித்து வருகின்றது. இதுதொடர்பில் பெற்றோரும் பாடசாலை சமூகத்தினரும் விழிப்பாக இருக்கவேண்டும்.**

- இவ்வாறு வவுனியா மாவட்டத்தில் இளையோரின் தற்போதைய நிலை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போது மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜெயக்கெனடி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா நகரை அண்டிய சில பாடசாலைகளில் மாணவ, மாணவிகள் சிலர் போதைப் பொருள்பாவனையில் ஈடுபடுகின்றனர் என தகவல்கள் கிடைத்துள்ளன. இந்தத் தகவலின் அடிப்படையில் அவர்களை அதிலிருந்து விடுபடச் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சில பாடசாலைகள் தமது பாடசாலையின் பெயரைக் கருத்திற்கொண்டு அதனை வெளிக்கொணர தயக்கம் காட்டுகின்றன. இதனால் இளம் சமுதாயம் போதைப்பொருள் பாவனையால் சீரழியும் நிலைக்கு தள்ளப்படுவர்.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவ சமூகத்தின் மீது அக்கறை செலுத்தி போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தும் வகையில் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

பெற்றோர் தமது பிள்ளைகள் தொடர்பிலும் அவர்களது நடத்தைகள், அவர்களது நண்பர்கள், அவர்கள் சென்று வரும் இடங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். போதையற்ற சமூகத்தை உருவாக்க அனைவரும் பொறுப்புடன் செயற்பட முன்வரவேண்டும் - என்றார். (ச-18)

### உடைமையில் கசிப்பு இருவர் கைது

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைக்கோட்டை பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கசிப்பை உடைமையில் வைத்திருப்பதாக கிடைத்த புலனாய்வு தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது. இதன்போது அதேபகுதியைச் சேர்ந்த 40 முதல் 50 வயது மதிக்கத்தக்க இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

### கட்டுடையில் ஹெரோய்னுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 26

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுடை பகுதியில் 20 மில்லிகிராம் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞரே இவ்வாறு நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

மானிப்பாய் - கட்டுடைப் பகுதியில் விசேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய இளைஞர்களை சோதனையிட முயன்றவேளை இளைஞர் ஒருவர் தப்பியோடியுள்ளார். அந்த இளைஞரை மடக்கிப்பிடித்து சோதனையிட்டபோது அவரிடமிருந்து 20 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஹெரோய்ன் போதைப்பொருளை கொள்வனவு செய்வதற்காக தெல்லிப்பழையிலிருந்து சைக்கிளில் வந்தார் என்று சந்தேகநபர் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

## முள்ளியவளையில் விபத்து: குடும்பத்தலைவர் படுகாயம்


முல்லைத்தீவு, ஒக். 26

முல்லைத்தீவு மாவட்ட மாவட்ட மருத்துவமனைக்கு முன்பாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவருடன் பயணித்த அவரது மனைவியான கர்ப்பிணிப் பெண்ணும் மீட்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியைச் சேர்ந்த குறித்த குடும்பஸ்தர் தனது கர்ப்பிணி மனைவியை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்ற வேளை சொகுசு வாகனம் ஒன்றுடன் மோதுண்டு விபத்து இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்து தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் சொகுசு வாகன சாரதியை கைதுசெய்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-19)



## மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் வீதிகளில் போக்குவரத்து சிரமம்

### பொதுமக்கள் அச்சம்

யாழ்ப்பாணம், ஒக்.26

தற்போது மழைகாலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் யாழ்ப்பாணத்திலுள்ள பிரதான வீதிகள் பல குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன. இதனால் அந்த வீதிகளூடாகப் போக்குவரத்து மேற்கொள்ள பொதுமக்கள் அச்சத்துடன் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கொக்குவில் குளப்பிட்டி சந்தி முதல் ஆனைக்கோட்டை சந்தி வரையான வீதியின் சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வீதியின் இடைநடுவில் காப்பெற் புனரமைப்பு மேற்கொள்ளப்படவில்லை. தற்போது மழை பெய்து வருவதால் இந்த வீதிகளில் தண்ணீர் தேங்கி குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

அதேபோன்று ஆனைக்கோட்டை முதல் வட்டுகோட்டை சங்கத்தை வீதி, வட்டுக்கோட்டை மாவடி முதல் மூளாய் வீதி, காரை நகர் மானிப்பாய் வீதி ஆகிய வீதிகளிலும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டும் இடைக்கிடையில் சில புனரமைப்புகள் இடம்பெறவில்லை. இதனால் மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் போக்குவரத்து செய்கின்றனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு முறைப்பாடளித்தும் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் தற்போது வீதிகள் குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் தற்காலிக புனரமைப்பு மேற்கொள்ளப்படுகின்றது. கடந்த காலமாக மக்கள் பல கோரிக்கைகள் முன்வைத்தும் அதிகாரிகள் அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் தற்போது பெய்து வரும் மழையால் வீதிகளின் நிலை மோசமடைந்துள்ளது. இந்த நிலையில் எந்தவொரு புனரமைப்பும் மேற்கொள்ளப்படவில்லை என்ற கேள்வி அதிகாரிகளிடத்தில் நிலவக்கூடாது என்பதற்காக தற்காலிகமாக புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (எ-14,125)

## மாட்டை களவாடிய சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 26

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்ணாகம் பகுதியில் மாட்டை திருடிய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வீட்டின் முன் கட்டிவைக்கப்பட்டிருந்த மாடு நேற்றுமுன்தினம் களவாடப்பட்டுள்ளது என உரிமையாளரால் வட்டுக்கோட்டைபொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதற்கமைய பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் அதேபகுதியைச் சேர்ந்த 28 வயதான சந்தேகநபரை கைதுசெய்தனர். திருடப்பட்ட மாட்டையும் மீட்டனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர். (ச-27,125)

## நவாலி கிழக்கு, தெற்கில் டெங்கு ஒழிப்புத் திட்டம்



வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட நவாலி கிழக்கு, தெற்குப் பகுதிகளில் டெங்கு ஒழிப்புத் திட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

பிரதேசசபை உறுப்பினர் நாகராசா பகிரதனின் தன்னார்வப் பங்களிப்புடனும் நவாலி கிழக்கு விபுலானந்தா சனசமூகநிலைய இளைஞர்களினது பங்களிப்புடனும் டெங்கு ஒழிப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மழைகாலம் ஆரம்பித்துள்ள நிலையில் டெங்கு குடம்பிகள் பரவுவதைத் தவிர்க்கும் முகமாக நவாலி கிழக்கு, நவாலி தெற்குப் பகுதியிலுள்ள பொதுமக்களது வீடுகளிலுள்ள கழிவுகள் அகற்றப்பட்டதோடு பொது இடங்களிலும் துப்புரவுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (ச-14,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வெள்ள அசுரனை வதம் செய்த உள்ளங்களுக்கு 'சபாஷ்'!

நேற்றுமுன்தினம் மாரிமழை யாழ்ப்பாணத்தில் கொட்டித் தீர்த்தது. ஒருசில மணித்தியாலங்களிலேயே நகர்ப் பகுதி வெள்ளத்தில் மிதக்கத் தொடங்கிவிட்டது. போதாக்குறைக்கு அன்றைக்குத்தீபாவளி. விடுமுறைநாள் என்பதால் எவரும் வந்து வெள்ளத்தை அகற்றும் பணியில் ஈடுபடப்போவதில்லை, அதனால் இரண்டு, மூன்று நாள்களுக்கு யாழ்ப்பாண நகரம் வெள்ளத்துக்குள்ளேயே அமிழவேண்டியதுதான் என்றே பலரும் நினைத்தனர். ஆனால், நடந்ததோ வேறு. வெள்ளம் சில மணித்தியாலங்களே நகரில் தேங்கி நிற்கமுடிந்தது. அதன் பின்னர் அத்தனை வெள்ளமும் சுத்தமாக வடிந்தோடிவிட்டது? எப்படி இந்த அதிசயம் நிகழ்ந்தது? வேறொன்றுமில்லை, விடுமுறை நாள்தானே என்று அலட்சியமாக இருக்காமல், 'வெள்ளம் பெருக்கெடுக்கிறது வாருங்கள் அதை அகற்றுவோம்' என்ற மாநகரசபையின் அறிவிப்பையேற்று அடுத்தகணமே களத்தில் குதித்துவிட்டார்கள் ஊழியர்கள்.

அவர்கள் வடிகால்களோடு சில மணித்தியாலங்கள் போராடியதன் விளைவாக, வெள்ளம் வீட்டுக்குள் வந்துவிடுமோ என்ற பயமில்லாமல் நகரவாசிகள் தீபாவளிப் பண்டிகையை நிம்மதியாகக் கொண்டாட முடிந்தது. மாநகரசபைப் பணியாளர்கள் அன்றைக்கு நினைத்திருந்தால், வெள்ளத்தை அகற்றவராமல், தங்கள் குடும்பத்தோடு தீபாவளியைக் கொண்டாடியிருக்கலாம் அல்லது விடுமுறை நாளென்பதால் இழுத்துப் போர்த்துக் கொண்டு மழைக்கூதலோடு உறங்கியிருக்கலாம். ஆனால், அவர்கள் அப்படியிருக்கவில்லை. 'இடுக்கை இழந்தவன் கைபோல' வெள்ளத்தைக் கண்டவுடனேயே நகர மக்களின் துயரைப்போக்க, தங்கள் விடுமுறை நாளையும், தீபாவளியையும் மறந்துவிட்டு களம் புகுந்துவிட்டார்கள்.

மழை கொட்டித்தீர்த்துகொண்டிருக்கும்போது, வெள்ளக்காட்டின் நடுவே, வடிகால்களைச்சீராக்குவதென்பது அவ்வளவு லேசான காரியமல்ல. வெள்ளமெது? வடிகால் எது? என்று கண்டறியவே படாதபாடு படவேண்டும். எங்கெல்லாம் அடைப்புகள் இருக்கின்றனவே அந்த இடங்களில் நீருக்குள் மூழ்கி, சில நிமிடங்கள் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு, அந்த அடைப்பை உண்டாக்கிய பொருள்களை வெளியே மீட்டெடுக்க வேண்டும். மழைகாலமென்பதால், மூழ்கும் இடத்தில் நாறிப்போய்க்கிடக்கும் கழிவுப்பொருள்களோடு விஷ ஜந்துக்களும் அதே வடிகாலில்தான் பதுங்கியிருப்பதுண்டு. நேரம் செல்லச் செல்ல வெள்ளத்தின் மட்டமும் இன்னும் உயர்வதால், உடலில் குளிரேறி, விறைத்துப் போகும் அபாயமும் உண்டு. இவ்வளவற்றையும் சமாளித்துக்கொண்டு, வெள்ளத்தை அகற்றுவதென்பது சாதாரண பணியல்ல. அந்த மகத்தான வேலையை நேற்றுமுன்தினம் யாழ்.மாநகரசபைப் பணியாளர்கள் செய்து காட்டியிருக்கிறார்கள்.

'இது எங்கள் நகரம், எங்கள் மக்கள், எனவே இங்கு ஏற்படவுள்ள வெள்ள அனர்த்தத்தை நாம் தான் தடுக்க வேண்டும்' என்ற எண்ணம் உடலெங்கும் ஓடிக்கொண்டிருந்த காரணத்தால்தான் மாநகரசபைப் பணியாளர்கள், மழையை ஒரு பொருட்டாகக்கூட கருதாமல், தீபாவளிக் கொண்டாட்டங்களையும் விடுமுறையையும் தூக்கி எறிந்துவிட்டு வடிகால்களை தூர்வாரி, வெள்ளத்தை அகற்றியிருக்கிறார்கள். இருளை அகற்றி ஒளியேற்றுவது மட்டுமே தீபாவளியல்ல, வெள்ள அனர்த்தத்தை இல்லாமலாக்கி மக்கள் மனதில் சந்தோச ஒளியை உண்டாக்குவதும் தீபாவளிதான். இந்தமுறை யாழ்.மக்களை அச்சுறுத்திய வெள்ளமெனும் அசுரனை வதம் செய்து, உண்மையான தீபாவளியை பரிசளித்த யாழ்.மாநகரசபையின் பணியாளர்கள் அனைவருமே காத்தற்கடவுள் கண்ணபிரானின் அவதாரங்களாகவே எல்லோர் மனதிலும் உயர்ந்து நிற்கிறார்கள். சார்ந்தோருக்கு மக்கள் சார்பில் ஒரு பெரிய 'சபாஷ்'!

நாளொரு நல்வார்த்தை

"வருத்தப்படாதீர்கள். நீங்கள் இழக்கும் எதுவும் வேறொரு வடிவத்தில் திரும்ப வரும்."

- ரூமி



# தமிழ் அரசியல் கைதிகள் பொங்கலன்றும் விடுவிப்பு

## மனோகணேசன் எம்.பி. உறுதி



**கொழும்பு, ஒக். 26**

**தீபாவளியில் விடுவிக்கப்பட்டதைப் போல், தைப் பொங்கலுக்கும் இன்னொரு தொகுதி தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னிடம் நேரில் கூறினார் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற தீபாவளி நிகழ்வில் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு பற்றியும், கொழும்பில் பொலிஸ் பதிவு பற்றியும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் உரையாடினோம்.

தீபாவளியில் விடுவிக்கப்பட்டதைப் போல், தைப்பொங்கலுக்கு இன்னொரு தொகுதி தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி கூறினார்.


அத்துடன் பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளை ஆராய, செயலணி ஒன்றை அமைக்குமாறு ஜனாதிபதியிடம் கோரினேன். அதற்கு ஜனாதிபதி கொள்கை ரீதியாக உடன்பட்டார் - என்றார். (எ-14,22)

# இலங்கை வந்தடைந்த அமெரிக்க அதிகாரி

கொழும்பு, ஒக்.26

அமெரிக்க திறைசேரியின் ஆசியாவுக்கான பிரதி உதவி செயலாளர் ரொபர்ட் கப்ரோத் நேற்று இலங்கை வந்தடைந்தார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றில், ரொபர்ட் கப்ரோத் தனது வருகையின்போது இலங்கை அரசாங்கம் மற்றும் பொருளியல் தலைவர்களைச் சந்திப்பார் எனத் தெரிவித்துள்ளார்.



இலங்கையின் பொருளாதார மீட்சியில் முன்னோக்கிச் செல்லும் வழி குறித்து கலந்துரையாடல்களில் கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

நாளை 27.10.2022 வியாழக்கிழமை ஐப்பசி 10

சுபநேரம் : 07.33 - 09.03
ராகுகாலம்: 01.33 - 03.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
28 - 05 - 1946



மறைவு
24 - 10 - 2022

## சண்முகம் கந்தசாமி

**(ஓய்வுபெற்ற சாலைப்பரிசோதகர் இலங்கை போக்குவரத்துச் சபை)**

அந்திரான் கரவெட்டி வடக்கு, நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் கந்தசாமி (ஓய்வுபெற்ற சாலைப்பரிசோதகர் இலங்கை-போக்குவரத்துச் சபை) கடந்த (24.10.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - இலட்சுமி தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற கந்தன் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், சின்னப்பிள்ளையின் பாசமிகு கணவரும், நந்தகுமார், விஜயகுமார், மீனாம்பிகை, செல்வகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், நிதர்சனா, பாரதி, தவசோதி, கௌரி ஆகியோரின் மாமனாரும், கார்த்தீபன், நிஜானி, சுவேதனா, அக்ஷயா, அத்திக்கா, அக்ஷயன், வைஷன், விஷால், ஒஸ்ரின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2022) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அந்திரான், கரவெட்டி வடக்கு,**
**நெல்லியடி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(CR 38355) (3/6)

# முதலாம் ஆண்டு நினைவு தினம்

பிறப்பு
02 - 01 - 1956



இறப்பு
05 - 11 - 2021

## அமரர் கந்தையா லோகநாதன்

**(திதி: வளர்பிறை பிரதமை)**

இரவும் பகலும் கடின உழைப்பு
உழைத்து
எம்மை வளர்த்து முன்னிலைப்படுத்தினீர்கள்
எமது உயிர் உள்ளவரை
உங்கள் நினைவு எங்களை
விட்டு நீங்காது.

**குடும்பத்தினர்**
**பழைய பாடசாலை வீதி, கல்வயல், சாவகச்சேரி.**

(CR 38187) (3/6)

# மரண அறிவித்தல்



## பத்மநாதன் சபாநாதன்

காரைநகர் நாவற்கண்டியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வதிவிடமகவும் கொண்ட பத்மநாதன் சபாநாதன் அவர்கள் கடந்த (24.10.2022) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பத்மநாதன் - திரவியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவகுருநாதர் - சிவக்கொழுந்து, தர்மகுலராஜா - சுகிர்தராணி ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற புஸ்பவதி மற்றும் பிறேமராகினி (ஓய்வுபெற்ற ஆசிரியை, மானிப்பாய் ஆங்கிலப் பாடசாலை) ஆகியோரின் அன்புக் கணவரும், மஞ்சுளா, மனோகரன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், காலஞ்சென்றவர்களான இராசமணி, கார்த்திகேயனி, மற்றும் சிவநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமிர்தலிங்கம், மாலினி ஆகியோரின் மாமனாரும், வனஜா, யமுனா, மலரவன், ஹரி, அனுஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக லோட்டன் வீதி, மானிப்பாய் இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை (27.10.2022) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று 11.00 மணிக்கு பிப்பிலி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**தோற்றம்**
**31.12.1946**

**மறைவு**
**24.10.2022**

**மனைவி : 077 923 2317**
**மனோகரன் (மகன்), மஞ்சுளா : 076 774 1153**

(CR 38356) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை



"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்." -வள்ளுவர்

## யாழ்ப்பாணத்தில்
# பண்பாட்டுக் கோலங்களை பறைசாற்றிய தமிழ்விழா

கே.எஸ்.சிவஞானராஜா

பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும் நெஞ்சம் எம் பண்பாடுகளை மறத்தலாகாது. ஓர் இனத்தின் அடையாளமாக விளங்குவது கலை கலாசார பண்பாடுகளாகும். அதனாலேதான் எமது மண் இன்றும் அதன் பேறுகளால் நீடித்து வாழ்கிறது. யாழ்ப்பாணமானது கந்தபுராண கலாசாரத்தினால் பின்னப்பட்டுள்ளது. யாழ் மாவட்டத்திலுள்ள பதினைந்து பிரதேச செயலகப் பிரிவிலும் அவை யாவுமே ஒன்று சேர்ந்து யாழ்ப்பாண மாவட்ட ரீதியிலும் இத்தகு பண்பாட்டு விழாக்கள் வருடாவருடம் நடத்தப் பெறுகிறது. இப்பெருவிழாவில் அந்தந்தப் பிரதேச கலைப் பொக்கிஷங்களையும், அவற்றுக்கான கலைஞர்களையும் முதன்மைப்படுத்துவது அவற்றுக்கான பொறுப்பாகும். யாழ் மாவட்டப் பண்பாட்டுப் பேரவைக் குழுமம் தன்னுடைய பணியைக் கனகச்சிதமாகச் செயற்படுத்தி வெற்றிகண்டுள்ளது.

யாழ் மாவட்டப் பண்பாட்டுப் பேரவையும், யாழ் மாவட்டச் செயலகமும், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடத்திய யாழ்ப்பாண மாவட்டப் பண்பாட்டு விழா ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில், கடந்த வெள்ளிக்கிழமை அன்று மண்வாசனை மணங்கமழ, மங்கல வாத்தியங்கள் சுவை சொட்ட, பண்தரு கலைகள் கண்களை வசீகரிக்க, பாலிக்கும் 'யாழ்ப்பாண நூல்' படிப்போரைப் பரவசமாக்க, பூரித்துப் பூத்திருக்கும் இளம் கலைஞர்களும், மூத்த கலைஞர்களும் மண்டபத்தினை அலங்கரிக்க, யாழ் மாவட்ட, பிரதேச அரச உத்தியோகத்தர்களும், ஆர்வலர்களும் சூழவே மொய்த்திருக்க, விண்ணையும் கண்ணையும் கவர்ந்து தன்னருள் பாலித்தது.

நாச்சிமார் கோவிலடியில் இருந்து விருந்தினர்கள் சகிதம் ஊர்வலம் ஆரம்பமாகியது. மாவட்டக் கலைஞர்கள், உத்தியோகத்தர்கள், ஆர்வலர்கள் அகம் மகிழ நாதஸ்வர மேளதாள வாத்தியம் ஆன்மிகச் சுவையை அள்ளித்தர, பண்பாட்டுக் கோலங்களான பூர்வீக கரகாட்டம் கண்களைக் கவர்ந்திழுக்க, பேறான பொம்மலாட்டம் பிரமாதமாகப் பார்ப்போரைப் பற்றி இழுக்க லயம் சொட்டிய கோலாட்டம் வந்தோரை வாலாயமாக்க மூஷிக வாகனன், பக்த ஹனுமான், சிவ முகூர்த்தங்கள், பார்வதி சமேத பரமேஸ்வர் தேவ சாம்ராஜ்ஜிய மூர்த்திகள் அருள்பாலிக்க அழகு மிளிர் உலவு மயில்கள் கவினுறு மாட்சியைக் காட்சியாக்க விழா இனிதே ஆரம்பமானது.

விருந்தினர்கள் மாண்புபெறும் பண்பாட்டுத் திருவிழாவில் யாழ். மாவட்ட பண்பாட்டுப் பேரவைத் தலைவர், மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் முன்னிலையாகி எழுந்தருள, பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன ஊர்வலத்தை மனமுவந்து அலங்கரிக்க, சிறப்பு விருந்தினரான கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினது வட மாகாணச் செயலாளர் இ.வரதீஸ்வரன் பேருவகையோடு அகம் நெகிழ்ந்து பவனியோடு உலாவர, கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா வரமாக அமையப் பெற, சாகித்திய ரத்னா ஐ.சாந்தன் எழுத்தாளர் சாம்ராஜ்ஜியத்தைப் பிரதிபலிக்க சரஸ்வதி மண்டபம் கொலுவாகி நிரம்பி வழிந்தது.





பண்பாட்டு உடைகளோடு பதினைந்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் செயற்பட்டமை மெய்சிலிர்க்க வைத்தது. பெண்கள் சேலைகட்டி மாலைசூடி குழுமியிருந்த காட்சியையும் ஆண்கள் வேட்டி கட்டிப் பரவியிருந்த இதமும் சரஸ்வதி மண்டபத்தைச் சோலையாக்கி வசீகரமாக்கியது. வழமையான சம்பிரதாயபூர்வ ஆரவாரக் கொண்டாட்டங்களோடு நிகழ்ச்சிகள் களைகட்டின. அன்றைய நிகழ்ச்சிகளுக்குச் சிகரம் வைத்தாற்போல அமைந்த நிகழ்ச்சி நல்லூர் நர்த்தன ஷேஷ்திராவின் வரவேற்பு நடனம் ஆகும்.



அத்தகைய நடன ஆற்றுகைக்கு அர்ப்பணித்து உழைத்த அத்தனை கலைஞர்களுக்கும், கண்களைச் சுவீகரித்த மாணவ அபிநயதாரிகளுக்கும் ஆயிரம் சபாஷ்களை சொந்தமாக்கலாம். ஒவ்வொரு பங்குநர்களின் பெயர்களையும் மந்திரமாக உச்சரிக்கலாம். தரப்பட்ட அழைப்பிதழிலும் இவர்களது பெயர்களை ஏன் உள்வாங்கவில்லை என்ற எண்ணம் எம்மனங்களில் நிழலாடியது.

அடுத்து, தேசிய ஓவியக் கலைஞர், சித்திர அபிமானி, முத்திரைக் கலைஞர் ஆசை இராசையாவுக்கான சமர்ப்பணமாக, அரங்கத் திறப்புரையினை கவிஞர் சோ.பத்மநாதன் ஒரு பொழிப்பான செழிப்புரையாக வடிவமைத்துக் கல்நெஞ்சைக் கனிவாக்கினார். இத்தனை பேராற்றல் உடைய ஒரு தேசிய ஓவிய மரபார்ந்த கலைஞனுக்கு இலங்கை ஏன் ஒரு 'கலாநிதி' பட்டத்தை மனமுவந்து அளிக்க முயலவில்லை. இதற்குப் பொறுப்பானவர்கள் அந்த ஆத்மாவுக்கு விடை பிரைச் சொல்லியே ஆகவேண்டும். யாழ் மாவட்டப் பண்பாட்டுப் பேரவை அந்தக் கலைஞனைப் பேறாக்கி வணங்கியமை ஒரு பெரும் தர்ம காரியமேயாகும். தொடர்ந்து, 'யாழ்ப்பாணம்' என்ற நூலுக்குப் புகழ் சொரிந்த தமிழ்ப் பேரறிஞர் பேராசிரியர் சிவலிங்கராஜாவின் வெளியீட்டு அறிமுக உரை, ஆவணப் பெட்டகத்தில் பதிவுசெய்யப்படுமாயின் 2023ஆம் ஆண்டிலாவது 'யாழ்ப்பாணம்' நூல் பதக்கத்தைச் சுவீகரிக்கும் என நம்பலாம். மேலும், கிராமிய வாசனைக்கு இடமளித்த இணுவில் குமர நாத்தனாலய குழுநடனம் மண்டபத்தை ஒரு கணம் நிமிர்ந்து எழவைத்துக் கரகோஷத்தை தமதாக்கியது. நிறைவாக 'யாழ் முத்து', இளங் கலைஞர் விருதுகள், பார்ப்பவர்களின் நெஞ்சங்களில் பேறாகிப் பெறுமதியாகியது. மேலும் அன்றைய நிகழ்வில், வழங்கப்பட்ட ஒவ்வொரு பிரமுகர்களது உரையும் காற்றிலே விடாமல் ஆவணமாகப் பதிவுசெய்யப்பட வேண்டும் என்பது கலாசாரப் பிரிவினர்களின் கடமையும் பொறுப்புமாகும். மொத்தத்தில் மேற்படி பண்பாட்டு விழா அவம் போகாத தவமான ஒரு விழாவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 08 . 1940



மறைவு 25 . 10 . 2022

## துரையப்பா மகேஸ்வரி

அரியாலை கச்சேரி கிழக்கு ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் பம்பைமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா மகேஸ்வரி நேற்று (25.10.2022) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - செல்லாச்சி தம்பதியினரின் ஆசை மருமகளும், தியாகேஸ்வரி, கமலேஸ்வரி, வனனேஸ்வரி, உதயநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கலைச்செல்வி (சுவிஸ்), ஹேமச்சந்திரன் (கனடா), பிறேமச்சந்திரன் (குஞ்சுபவா), தவச்செல்வி ஆகியோரின் அன்புத் தாயாரும், பாஸ்கரன் (சுவிஸ்), ஜீவராணி (அசிரியர், தவசியாகுளம் அ.த.க பாடசாலை), வேஜனா, கணேசபாலன் (கேபிள்T.V) ஆகியோரின் அன்பு மாமியாரும், துஷ்யந்தன் - மதுரந்தினி, சுஜீவன், கௌசிகா, ஜெனுசன், ஜெசிக்கா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2022) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2.30 மணிக்கு வவுனியா பம்பைமடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


பம்பைமடு,
வவுனியா

(CS 21371) (3/6)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 09 . 1934



மறைவு 22 . 10 . 2022

## அமரர் திரு. இராமலிங்கம் சோமசுந்தரம்

யாழ். வேலணை மேற்கு சிற்பனையைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சோமசுந்தரம் அவர்கள் கடந்த (22-10-2022) சனிக்கிழமை அன்று கனடா Toronto வில் சிறப்பனை முருகன் திருவடி அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நாகநாதர் இராமலிங்கம் - புவனேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான முருகேசபிள்ளை (காங்கேசர்) - இரசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அருந்தவநாயகி அவர்களின் ஆருயிர் கணவரும், காலஞ்சென்றவர்களான குணரத்தினம், பாலசுப்பிரமணியம் (கந்தசாமி), இராசலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நம்பிராஜன், நந்தகுமார், நளினி, நகுலகுமார், நரேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், வாசுகி, சசிகலா, நந்தகுமார், துளசிகா, வர்ணதீபா ஆகியோரின் அன்பு மாமனாரும், நிலா - அனுஜன், சகானா, அபர்ணா, அபினாஷ், லக்சிகா, அக்சயன், அனன்யா ஆகியோரின் அன்புப் பேரனும், பேபிசரோஜா, சிவபுரநாதன், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம்,சாந்தலிங்கம், சுந்தரலிங்கம் மற்றும் இராசநாயகி, சந்திரலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், அன்னம், சாரதாம்பாள், யோகேஸ்வரி, காலஞ்சென்ற சற்குணபாலன் (CTB) மற்றும் நிர்மலகாந்தி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.10.2022) வியாழக்கிழமை காலை 7.30 - 10.30 மணியளவில் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


இல. 27, மதவடி ஒழுங்கை,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(CS 47293) (3/6)

தகவல்:
குடும்பத்தினர்
077 372 6103

# மரண அறிவித்தல்

மலர்வு 01 . 03 . 1941



மறைவு 23 . 10 . 2022

## அப்பாக்குட்டி சண்முகலிங்கம்

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் நீரவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாக்குட்டி சண்முகலிங்கம் அவர்கள் கடந்த (23.10.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, பூரணம், தர்மலிங்கம் ஆகியோரின் சகோதரரும் செல்வரஞ்சினி (ஆசிரியை, அத்தியார் இந்துக்கல்லூரி), உதயச்சந்திரன் (பிரான்ஸ்), சசிகுமார் (பரிசாரகர் போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்), திருமாறன் (எரிபொருள் நிரப்பு நிலையம் யாழ். ப.நோ.கூ.ச) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நந்தகுமார் (எரிபொருள் நிரப்பு நிலையம் யாழ். ப.நோ.கூ.ச), கௌரிபவானி (பிரான்ஸ்), துவாரகா, கிரியாழினி ஆகியோரின் மாமனாரும் லதாஷன், மகீஜா, கிஷானன் ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும் கௌசன், அபிஷனா, றக்சன் (பிரான்ஸ்), பானுஷன், கஜானன், மிதுனஜா, டினுஸ்கான், சயூரி, நக்சஜன் ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2022) புதன்கிழமை ந.ப 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## அமரர் செல்லையா தில்லைநடராசா
### (ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட்)

யாழ்ப்பாணம் கொட்டடி, சீனிவாசன் வீதியை பிறப்பிடமாகவும், மூளாய் வீதி, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் செல்லையா தில்லைநடராசா (ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட்) 24.10.2022 திங்கட்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் செல்லையா பூமணியின் கனிஷ்ட புதல்வனும் அமரர் செல்லத்துரை பாக்கியத்தின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காயத்திரி (அமெரிக்கா), வாகீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தவசுந்தரத்தின் (அமெரிக்கா) அன்பு மாமனாரும் அனுஷன், அஷ்விதா ஆகியோரின் அன்புப் பேரனும், சோமஸ்கந்தர் (கனடா) அமரர்களான சபாரட்ணம், தியாகராசா, சிந்தாமணி, தனபாலன், குஞ்சிதபாதம் ஆகியோரினது அன்புச் சகோதரரும், இராசலிங்கம், பஞ்சலிங்கம் (நோர்வே), இரத்தினேஸ்வரி அமரர்களான சிவராமலிங்கம், யோகலிங்கம், தவேஸ்வரி, ஜெகநாதலிங்கம் ஆகியோரது மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (27.10.2022) வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்லத்துரை கடை
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை

தகவல் :
குடும்பத்தினர்.
0778445446

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாண வர்களின் சந்தை பாடசாலை வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ய-9)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற வரணி சிட்டி வேரம் கண்ணகை அம்மன் மீது பாடலா சிரியர் மலர் சின்னத்துரையால் இயற்றப் பட்டு தென்னிந்திய முன்னணிப் பாடகர் களால் பாடப்பட்ட இறுவட்டு வெளியீட்டு விழா ஆசிரியர் சி.சிவசந்திரன் தலைமை யில் வரணி கலாசார மத்திய நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வியியற் கல்லூரி யின் சிரேஷ்ட விரிவுரையாளர் சைவப் புலவர் சி.கா.கமலநாதன், சிறப்பு விருந்தி னராக வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயப் பரிபாலன சபைத் தலை வர் வே.தங்கராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (ய-159)




சிங்கர் ஃபினான்ஸ்

இன்று முதல் உங்கள் கிளிநொச்சி நகரில்...


145 வருடங்களுக்கும் மேலாக முன்னணி வர்த்தக நாமமாக திகழும் சிங்கர் நிறுவனத்தின் துணை நிறுவனமாக தனித்தடம் பதித்துள்ள சிங்கர் ஃபினான்ஸ் பி.எல்.சி. நிதி நிறுவனமானது இலங்கையின் நிதித் துறையில் ஓர் வினைத்திறன் மிக்க சேவையை வழங்கி வருகின்றது.

இலங்கையின் வேளாண்மைத் துறை, தொழிற்துறையின் அபிவிருத்திப் பாதைக்கு ஓர் நிதி நிறுவனமாக அளப்பரிய பங்காற்றி வரும் சிங்கர் ஃபினான்ஸ் இன்று முதல் தனது 48 ஆவது கிளையை கிளிநொச்சி நகரில் உங்கள் நிதித் தேவைகளுக்கான உன்னத சேவையை வழங்கும் நோக்கில் உங்களுடன் கைகோர்த்து தனது பயணத்தை இனிதே ஆரம்பிப்பதை எண்ணி பெருமிதமடைகின்றது!

A - 9 வீதி, கிளிநொச்சி

076 098 7155, 076 098 7156

SINGER FINANCE

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினை ஸ்ரீநாகபூசணி அம்பாள் ஆலயத்தில் கேதார கௌரி விரத காப்பு உற்சவ பூஜை வழிபாடுகள் நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றன. (எ-22)

## தேசிய மல்யுத்தப் போட்டி: முல்லை மாணவன் தங்கம்

முல்லைத்தீவு, ஒக். 26

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மல்யுத்தப் போட்டியில் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி மாணவன் தங்கப்பதக்கத்தைப் பெற்று முல் லைத்தீவு மாவட்டத்துக்கும் கல்லூரிக் கும் பெருமை சேர்த்துள்ளான்.

2022 ஆம் ஆண்டுக்கான பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்தப் படும் தேசிய மல்யுத்தப் போட்டி கடந்த 22, 23, 24 ஆகிய 3 தினங்கள் கம்பஹாவில் நடைபெற்றது. மடமாகாணத்தில் போட்டிகள் நடை பெறாத நிலையில் முல்லைத்தீவு பாடசாலைகள் மாத்திரம் தேசிய போட்டியில் நேரடியாகப் பங்குபற்றி யிருந்தன. வித்தியானந்தா கல்லூரி மாணவர்கள் 12 பேரும் முள்ளிய வளை கலைமகள் வித்தியாலய மாண வர்கள் 7 பேரும் பங்குபற்றினர்.

இதில் வித்தியானந்தா கல்லூரி மாண வன் சுஜீதன் தங்கப்பதக்கத்தையும் முள்ளியவளை கலைமகள் வித்தி யாலய மாணவன் ஜெயானந்தன் வினேசன் வெள்ளிப்பதக்கத்தையும் பெற்று சாதனை படைத்தனர். (எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் சிறப்புற்றது தமிழ் விழா

இரா. நிஷாந்தன்
தமிழாசிரியர்
கிளிநொச்சி தெற்கு கல்வி வலயம்

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயம் பெருமையோடு வழங்கிய தமிழ் விழா கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது.

கிளிநொச்சி தெற்கு வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் ப.பரணிதரனின் நெறிப்படுத்தலின் கீழ் கிளிநொச்சி தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தலைமையில் விழா சிறப்புற நடைபெற்றது. செந்தமிழ் புகழ்பாடும் இந்த விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறைப் பேராசிரியர் கி.விசாகரூபன் கலந்து கொண்டார்.

மேலும், சிறப்பு விருந்தினர்களாக மருத்துவ கலாநிதி மா.தவராசா, மற்றும் மருத்துவ கலாநிதி மதுவந்தி தவராசா (கிளிநொச்சி பொது மருத்துவமனை) ஆகியோரும், விழாவில் மாண்பு சேர்க்கும் வகையில் குமரித் தமிழ் மன்ற நிறுவுநர் நா.வை. மகேந்திரராசா மற்றும் கிளிநொச்சி தமிழ்ச்சங்கத் தலைவர் வே.இறைபிள்ளை ஆகியோர் மாண்புறு விருந்தினர்களாகவும் கலந்து விழாவில் நிறைவு சேர்த்தனர். விருந்தினர்கள் யாவரும் இன்னிய இசையோடு மங்கல வாத்திய இசையும் இணைந்து முழங்கிட உயரிய வரவேற்பளிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டமை கண்களுக்கு மகிழ்வை அளித்திருந்தது.




### விருதுகளும் கௌரவிப்பும்

பெருமை தங்கிய இந்த விழாவில் தமிழ்ச்சேவை ஆற்றியோருக்கான உயரிய விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அவ்வகையில், கிளிநொச்சி கல்வி வலயத்தின் நீண்ட காலமாக தமிழ்ப்பாட உதவிக்கல்விப்பணிப்பாளராக பணியாற்றி தற்போது தொழில் வழிகாட்டல் அதிகாரியாக செயற்பட்டு எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் ஓய்வு பெற இருக்கின்ற திருமதி பிறேமா மதுரநாயகத்தின் தமிழ்ச்சேவையைப் பாராட்டி 'தமிழ்ப்பெருமாட்டி' எனும் உயர் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. அதுபோல கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகராக பணியாற்றி எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் ஓய்வு பெறவுள்ள க.கிருஷ்ணமூர்த்திக்கு 'தமிழ்ச்சேவகன்' எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை. இவற்றோடு இணைந்ததாக பல ஆண்டுகளாக ஆசிரியப் பணியாற்றி தங்களது அறுபது வயதுப் பூர்த்தியில் ஓய்வுபெற்றுச் செல்கின்ற ஆசிரியர்களின் சேவையைப் பாராட்டி மதிப்பளிக்கின்ற நிகழ்வும் இனிதே நடைபெற்றது.

### அணி சேர்த்த கலை நிகழ்வு

அருமையான இந்த தமிழ் விழாவில் கிளிநொச்சி தெற்கு வலயப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் பலவும் சிறப்பான முறையில் ஆற்றுகை செய்யப்பட்டிருந்தன.

வரவேற்பு நடனம் முதலாக பின்னல் கோலாட்டம், தமிழ் வணக்க நடனம், பக்திச் சுவை மிகுந்த நடனம், நாட்டார் பாடல், பேச்சு, பாரதியார் பாடலுக்கான உணர்ச்சி மிகுந்த நடன ஆற்றுகை முதலான பல்வேறு கலை நிகழ்வுகள் விழாவில் நிகழவே தமிழ் மணம் எங்கும் வீசியது.

### மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்குதல்

தேசிய ரீதியிலான தமிழ் மொழித் தினப் போட்டிகளில் கோட்ட மட்டம் மற்றும் மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று நிலைகளைப் பெற்ற மாணவர்களுக்கான பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. இதனோடு இணைந்ததாக 2021ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப்பரீட்சையில் தமிழ்ப்பாடத்தில் 'ஏ' தரச் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் செயற்பாடும் இடம்பெற்றிருந்தது. சிறந்த ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்தத் தமிழ் விழாவில் கிளிநொச்சி கல்வி வலயங்களின் கோட்டக்கல்வி அலுவலர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், கலைத்துறை சார்ந்தோர் மற்றும் பொதுநலன் சார்ந்த பொதுமக்கள் எனப் பல எண்ணிக்கையானோர் கலந்து விழாவைச் சிறப்பித்திருந்தனர்.






# கண்கவர் கலைநிகழ்வுகளுடன் துணுக்காய் பண்பாட்டு விழா!




வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் துணுக்காய் பிரதேச செயலக பண்பாட்டு பேரவையும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா துணுக்காய் பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் கோலாகலமாக இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்கள் பிரதேச மக்களால் பாண்பாட்டு நடனங்கள் மற்றும் வாத்தியங்கள் முழங்க மண்டபத்துக்கு வெகு விமரிசையாக அழைத்து வரப்பட்டனர். மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய நிகழ்வில் விருந்தினர்களைவரவேற்கும் முகமாக மல்லாவி நர்த்தனாலயா மாணவிகளினால் வரவேற்பு நடனமும் கோலாட்ட நடனங்களும் அரங்கேற்றப்பட்டன.

பிரதேச செயலாளர் ச.லதுமீரா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்டச் செயலர் க.விமலநாதன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக மேலதிக மாவட்டச் செயலர் கனகேஸ்வரன், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் சி.ராஜமல்லிகை வவுனிக்குளம் நீர்பாசன பொறியியலாளர் கை.பிரகாஸ் கௌரவ விருந்தினராக மூத்த கலைஞர் [illegible]காசலம் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசித்து பழகலாம் வாருங்கள்



ராணி சீதரன்

அரிச்சந்திரன் கதையை வாசிப்பதில் காவியா மூழ்கியிருந்தாள். எழுத்துக் கூட்டி அதை வாசித்து முடித்தவளுக்கு அந்தக் கதையை எவ்வாறு கூறுவது என்பது புரியவில்லை.

இப்போது வாசிப்பு மாதம் என்பதால் ஆசிரியை இட்ட கட்டளை அவளைப் பயமுறுத்திக் கொண்டிருந்தது. எல்லோரும் எதையாவது ஒன்றை வாசித்து வர வேண்டும் என்றும், அதன் சாராம்சத்தைக் கூற வேண்டும் என்பதும் ஆசிரியையின் கண்டிப்பான கட்டளை. எவ்வளவு முயன்றும் காவியாவால் தான் வாசித்த கதையின் சாராம்சத்தைக் கூற முடியவில்லை. காலையில் இருந்து பல தடவைகள் முயற்சித்தாகி விட்டது. பாடசாலை செல்லும் நேரமும் நெருங்கிக் கொண்டிருந்தது. அம்மாவிடம் கூறிப்பார்க்கலாம் என்று அம்மாவைக் கூப்பிட்டாள் காவியா. என்ன? என்று பதில் மட்டும் தான் வந்தது. தாயோ கைபேசியிலும், நாடகத்திலும் மூழ்கியிருந்தார். காவியாவுக்கு எரிச்சலாக இருந்தது.

என்னைவிட அம்மாவுக்கு நாடகம் தான் முக்கியமாகி விட்டது என்று எரிச்சலுடன் நினைத்துக் கொண்ட காவியா, "பள்ளிக்கூடம் போய்வருகின்றேன்" என்று கூறிக்கொண்டு புறப்பட்டாள்.

பாடசாலை சென்ற காவியாவுக்குப் படபடப்பாகவே இருந்தது. அவள் எதிர்பார்த்தது போன்றே சாந்தி ரீச்சர் வகுப்புக்கு வந்ததும் ஒவ்வொருவராகக் கேட்கத் தொடங்கினார்.

காவியாவின் முறை வந்தபோது காவியா எழுந்தாள். "என்ன படித்தீர்கள்" என்று காவியாவைப் பார்த்துக் கேட்டார் சாந்தி ரீச்சர். "அரிச்சந்திரன் கதை" என்று மென்று விழுங்கிப் பதில் சொன்னாள் காவியா.

"சரி நீங்கள் வாசித்த கதையைப் பற்றிக் கூறுங்கள்" என்று விட்டு கதிரையில் அமர்ந்தார் சாந்தி ரீச்சர். காவியா திக்கித் திணறி மௌனமாக நின்றாள். சாந்தி ரீச்சர் மீண்டும் காவியாவை நோக்கி "வாசித்த கதையின் சாராம்சத்தைக் கூறுங்கள்" என்று கையசைத்தார்.

மௌனமாக நின்ற "ரீச்சர் எனக்கு வாசிக்க முடியும். ஆனால் அதைத் திரும்பச் சொல்லத் தெரியவில்லை" என்று மெல்லக் கூறினார். காவியாவைப் பார்த்த சாந்தி ரீச்சர், "உங்களில் வேறு யாருக்காவது இப்படிப் பிரச்சினை இருக்கிறதா?" என்று வகுப்பில் இருந்தவர்களைக் கேட்டார்.

வீணா, சுகி, நரேஸ் ஆகியோரின் கைகள் உயர்ந்தன. "ஓம் ரீச்சர் எங்களுக்கும் இதே பிரச்சினைதான் ரீச்சர், ஏன் என்று தெரியவில்லை" என்று கோரஸாக அவர்களின் குரல்கள் எழுந்தன.

சாந்தி ரீச்சரின் மனதில் கவலை குடிகொண்டது. பரீட்சை எழுதவிருக்கும் பிள்ளைகளின் நிலைமை அவருக்கு கவலையை ஏற்படுத்தியது. "பிள்ளைகள் உங்களுக்கு குற்றெழுத்து, நெட்டெழுத்து வேறுபாடு தெரியவில்லை. வாசிக்க முடியாததற்கு அதுவும் ஒரு காரணம். வேறு என்ன காரணம் இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?" என்று மாணவர்களைப் பார்த்துக் கேட்டார் சாந்தி ரீச்சர்.

"ரீச்சர் ன,ண ள ழ ர ற எழுத்துக்களைப் பிழையாக உச்சரிக்கின்றேன்" என்றாள் நிதா. "கெட்டிக்காரி, பிழைகளைத் தெரிந்து கொண்டால் அவற்றை இலகுவாகத் திருத்திக் கொள்ளலாம்" என்று பாராட்டினார் சாந்தி ரீச்சர்.

"அடிப்படை எழுத்துக்களின் விளக்கம் தெரியாவிட்டால், சொற்களை வாசித்தாலும் அவற்றைக் கிரகித்துக் கொள்ள முடியாது. குறில், நெடில் வேறுபாடு; ஒத்த ஒலிப்புடைய எழுத்துக்களின் உச்சரிப்பு வேறுபாடு, உயிர்க்குறிகள் பற்றிய விளக்கம் போன்றவற்றை விளங்கிக் கொண்டால் மட்டுமே வாசித்துக் கிரகித்துக்கொள்ள முடியும். அதற்குத் தொடர் பயிற்சி தேவை" என்று மாணவர்களுக்கு விளக்கினார் சாந்தி ரீச்சர்.

"இரண்டு மாதங்களில் நான் உங்களை நன்றாக வாசித்துக் கிரகிக்கும் அளவுக்கு மாற்றுகின்றேன். எல்லோரும் ஒத்துழைப்பீர்களா?" என்ற சாந்தி ரீச்சரின் கேள்விக்கு அனைவரது கைகளும் உற்சாகமாக எழுந்து பதிலளித்தன. ரீச்சருக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

"பாடசாலை முடிந்ததும் அனைவரும் நிற்க வேண்டும். வீட்டில் இருந்து அம்மா அல்லது அக்கா கட்டாயம் வர வேண்டும். வீட்டு வேலைகள் தருவேன் செய்துகொண்டு வர வேண்டும். வரவு ஒழுங்காக இருக்க வேண்டும்" என்று சாந்தி ரீச்சர் மாணவர்களுக்கு கூற அவர்களின் தலைகள் அசைந்தன.

அடுத்தநாள் பாடசாலை முடிந்த பின்னர் வகுப்பறைக்குள் நுழைந்த சாந்தி ரீச்சருக்கு ஒருபுறம் ஆச்சரியம் ஒருபுறம் மகிழ்ச்சி ஒருபுறம். வகுப்பறை நிறைந்திருந்தது. வகுப்பறையின் பின் வரிசையில் தாய்மார் பிள்ளைகளுக்கு உணவு கொண்டு வந்து கொடுத்துவிட்டு அமர்ந்திருந்தனர்.

சாந்தி ரீச்சர் பிள்ளைகளின் நிலைமையை எடுத்துக் கூறியமையுடன், மொழியின் முக்கியத்துவம் தொடர்பாகவும் கூறினார். எழுத்துக்கள் தொடர்பாக மாணவர்களின் விளக்கமின்மையையும் அவர் கூறினார்.

அதன்பின்னர் அவர் அரிச்சுவடியை எடுத்துக் காட்டி விளக்கமளிக்கத் தொடங்கியதும் அங்கிருந்தவர்களின் முகபாவனை மாறியது. சிலர் சிரித்தனர், நாங்கள் என்ன சிறுவர்களா? என்று சிலர் கேட்கவும் செய்தனர். அங்கிருந்த தாய்மாரும் முகத்தைச் சுழித்தனர். காவியாவின் தாயும் அதற்கு விதிவிலக்கல்ல. பரீட்சை எழுதப் போகும் பிள்ளைகளுக்கு எழுத்துப் படிப்பித்து நேரத்தை வீணடிக்கிறீர்களா? அல்லது அவமானப்படுத்துகிறீர்களா? என்று சினத்துடன் கேட்டார் காவியாவின் தாய். "காவியா எழும்பி வா வீட்டுக்குப் போகலாம்" என்று ஆத்திரத்துடன் காவியாவை அழைத்தவாறு எழுந்தாள் தாய்.

தொடரும்..



## ஊடகர் கிருஷ்ணனுக்கு 'ஊடகக் கலைஞர்' விருது

ஊடகத்துறையில் 30 வருடங்களுக்கு மேல் உதயன் செய்தியாளராகப் பணியாற்றும் ஐ.கிருஷ்ணன், பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் பண்பாட்டுப் பெருவிழாவில் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

'ஊடகக் கலைஞர்' என்ற விருதே அவருக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது. ஊடகத்துறையில் அர்ப்பணிப்பான சேவை வழங்கி வருவதற்காக ஏற்கனவே சமூகச்சுடர், கலைசாகரம் மற்றும் ஊடக கலைமாமணி ஆகிய மூன்று விருதுகள் ஏற்கனவே அவருக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் பல்வேறு துறைகளில் நீண்டகாலம் பணியாற்றும் மேலும் 40 கலைஞர்கள் பண்பாட்டுப் பெருவிழாவில் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ம-9)

## ஞானபண்டிதா வித்தியின் நூற்றாண்டு விழாவில் சிலைகள் திறப்பு







கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டிதா வித்தியாசாலையின் நூற்றாண்டு விழா நினைவாக பாடசாலை நிறுவுநர் குமாரசாமிப்புலவர் சிலை, திருவள்ளுவர் சிலை, சரஸ்வதி சிலை ஆகியன அண்மையில் திறந்து வைக்கப்பட்டன. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
09
.
11
.
1998



மறைவு
24
.
10
.
2022

### அமரர் கணேசலிங்கம் லம்போசிகன் (லம்போ)

**(Sailan Studio Magic)**


நாகர்கோவில் தெற்கை பிறப்பிடமாகவும் உபயகதிர்காமம் புலோலியை வதிவிடமாகவும் கொண்ட கணேசலிங்கம் லம்போசிகன் (24.10.2022) திங்கட்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் கணேசலிங்கம் லலிதாதேவி (ஆயுள்வேதவைத்தியர்) ஆகியோரின் பாசமிகு மகனும், சிவானுசன் (Sailan Studio Magic) யதுர்சன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற கந்தையா (விதானையார்), பாக்கியம் மற்றும் பரராஜசிங்கம் (பிரசித்திபெற்ற ஆயுள்வேத வைத்தியர் நாகர்கோவில்), இராசமணி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார். அன்னார் சிவராசா (ஊடகவியலாளர்), காலஞ்சென்ற பாலபரமேஸ்வரி, மயில்வாகனம், புஸ்பவதி, சிவஞானசுந்தரம் (ஓய்வுபெற்ற உபதபாலதிபர், நாகர்கோவில்), செல்வமணி, விமலாதேவி, புஸ்பவதி, றாஜமோகன், புனிதவதி (USA), ஆகியோரின் அன்புப் பெறாமகனும் செல்வகுலசிங்கம் தவமணிதேவி, காலஞ்சென்ற செல்வகுலசிங்கம், நாகேஸ்வரன் (ஊழியர் தபாலகம் பருத்தித்துறை), செல்வரதி யோகேஸ்வரன் (ஊழியர், தபாலகம் பருத்தித்துறை), ஜெயரூபி ஆகியோரின் பாசமி மருமகனும் சுலோசனா (உபதபாலதிபர், நாகர்கோவில்), லோகேந்திரம் (லோசன்), விஷ்ணுகாந்தன், சுகந்தறஜனா, சுகந்தினி, சுலக்சனா (சுருக்கெழுத்தாளர், நீதவான் நீதிமன்றம் பருத்தித்துறை), புவிகரன், விதுசரன், கீர்த்திகா (லண்டன்), விதுசன், கோதுஷா, விபுகா, ஆர்த்திகை, பிரித்தனா, யுவஹாசன் (USA), யுவராஜன் (USA) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2022) புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
**0776693641, 0777781360**

## மரண அறிவித்தல்



தோற்றம்
09
.
09
.
1953

மறைவு
25
.
10
.
2022

### திருமேனி ஜெயராஜசிங்கம்


பழைய பொலிஸ் நிலைய வீதி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமேனி ஜெயராஜசிங்கம் அவர்கள் 25.10.2022 செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருமேனி அன்னலட்சுமி தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான சிவகுரு-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புஸ்பவதியின் சகோதரனும் வசந்தாவின் பாசமிகு கணவரும் ஜெனிதா (லண்டன்), ஜெசிதா (கால்நடை வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), பிரதாப் (பிரான்ஸ்), பிரகாஷ் (பிரான்ஸ்), சங்கீதன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் அகிலேஸ்வரன் (லண்டன்), நர்மதா (டென்மார்க்), கம்சியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஜெனன், அபினன் (லண்டன்), தாயகன், காவியன், யாழவன் ஆகியோரின் பாசமிகு பேரனும் சந்திராதேவி, மகேந்திரன், விமலா, சாந்தா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.10.2022) வியாழக்கிழமை 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 27.09.2022 அன்று சிவபதமடைந்த

எமது குலவிருட்சம்
அமரர்

### மூத்ததம்பி கனகலிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (26.10.2022) புதன்கிழமை காலை 05.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**
**கோப்பாய் மத்தி,**
**கோப்பாய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியியல் நடவடிக்கை முறைக்கோவையின்( 1889ம் ஆண்டின் 2ம் இலக்கச்சட்டம்) பிரிவு 16ன் கீழான

# அறிவித்தல்
## வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில்

1917ம் ஆண்டின் 9ம் இலக்க நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் 112ம் பிரிவின் கீழ் செய்யப்படும் விண்ணப்பம். **கோவிந்தராஜா பரமேஸ்வரன்.**
**மருதோடை கந்தசாமி கோவில்**
**மருதோடை.**
**ஓமந்தை வவுனியா.**

**மனுதாரர்**

**வழக்கு.இல:- நானாவிதம் 30 / 2022** **எதிராக**

1. ஸ்ரீஸ்கந்தராஜா ஸ்ரீசங்கமீரா
2. ஸ்ரீஸ்கந்தராஜா ஸ்ரீசங்கீதன்
3. ஸ்ரீஸ்கந்தராஜா ஸ்ரீசங்கநேசன்
   மூவரும்
   203 கோவில் வீதி. நல்லூர். யாழ்ப்பாணம்.
4. கோவிந்தராஜா உதயகுமாரன்
   மருதோடை கந்தசாமி கோவில் மருதோடை.
   ஓமந்தை. வவுனியா.
5. கோவிந்தராஜா வள்ளிகாந்தன்
   இல:421. பருத்தித்துறை வீதி.
   நல்லூர். யாழ்ப்பாணம்.
6. ஸ்ரீஸ்கந்தராஜா பரமேஸ்வரி
7. செல்வத்துரை ஸ்ரீஸ்கந்தராஜா
   இருவரும்
   மருதோடை கந்தசாமி கோவில் மருதோடை.
   ஓமந்தை. வவுனியா.
8. ஸ்ரீதரன் உதயகுமாரி
9. நடராஜா ஸ்ரீதரன்
10. கோவிந்தராஜா கேதீஸ்வரி
    மூவரும்
    இல:421. பருத்தித்துறை வீதி.
    நல்லூர். யாழ்ப்பாணம்.

**எதிர் மனுதாரர்கள்**

மருதோடை கந்தசாமி கோவில் தேவஸ்தானத்தின் ஆலயம் மனுதாரரின் தாய் வழிப்பாட்டன் செல்லையாக்குருக்கள் என்பவரால் உருவாக்கப்பட்டு குறித்த இதன்பின் முதலாம் ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தில் ஜம்பொன்னால் செய்யப்பட்ட வேலை நாட்டி குறித்த கோயிலையும் குறித்த கோவிலின் அசையும் அசையா சொத்துக்களை பராமரித்தும் கோவிலில் பூசைசெய்தும் தனது சொந்த ஆதனங்களாக ஆண்டனுபவித்து வரலானார்.

காலத்திற்கு காலம் இதன் பின் 2ம் 3ம் 4ம் 5ம் 6ம் ஆதன அட்டவணைகளில் விபரிக்கப்படும் ஆதனங்களை வாங்கியும் விற்றும் ஈடு மற்றும் பொருத்த சாட்டுதல் நன்கொடை என பல்வேறு வகையான பரிமாற்றங்களுக்கு உட்பட்டு மனுதாரரின் முன்னுறுவோருக்கு சொந்தமாகி இறுதியில் குறித்த மருதோடை கந்தசாமி கோவில் தேவஸ்தானத்திற்கு உரித்தாக்கப்பட்டது.

மனுதாரின் முன்னோர்கள் பரம்பரை பரம்பரையாக பராமரித்து வந்த மேற் குறித்த இதன் பின் ஆதன அட்டவணைகளில் நன்கு விபரிக்கப்படும் ஆதனங் களுக்கு யாழ்ப்பாண பிரசித்த நொத்தாரிஸ் பெஞ்சமின் செல்லையா பாலசிங்கம் முகதாவில் முடிந்த 264ம் இலக்க உறுதி மூலம் மனுதாரரின் தந்தையார் குறித்த கந்தசாமி கோவிலின் தர்மகர்த்தாவாக முறைப்படி நியமிக்கப்பட்டார்.

குறித்த 1981 ம்ஆண்டு ஜூன் மாதம் 13ம் திகதி முதல் தான் இறக்கும் வரை குறித்த ஆலயத்தின் பரம்பரை வழிவரு தர்மகர்த்தாவாகவும் நியமிக்கப்பட்ட பரிபாலக ராகவும் முகாமையாளராகவும்(மனேஜர்) மனுதாரரின் தந்தையார் செயற்பட்டு கோயிலை நிர்வகித்து வந்தார்.

குறித்த கோயிலின் தர்மகர்த்தாவாகவும். முகாமையாளராகவும் செயற்பட்டு வந்த குறித்த சோமசுந்தரக்குருக்கள் கோவிந்தராஜா 1993ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 05ம் திகதி மரணசாதனமின்றியும் குறித்த கோவிலிற்கு தர்மகத்தாவை முறைப்படி நியமிக்காமலும் இறந்தார்.

குறித்த 1981 ம் ஆண்டு ஜூன் மாதம் 13ம் திகதி யாழ்ப்பாண பிரசித்த நொத்தாரிஸ் பெஞ்சமின் செல்லையா பாலசிங்கம் முகதாவில் முடிந்த 264ம் இலக்க மனேஜர் தத்துவம் உறுதிச் சாதனத்தின் மூலம் குறித்த சோமசுந்தரக்குருக்கள் கோவிந்தராஜா இறந்ததும் அவரது மூத்த ஆண் வாரிசும் வேத மந்திரங்களை நன்கு அறிந்தவரும் ஆலயத்தில் ஏலவே பூசகராக இருந்து வந்தவருமான மனுதாரர் குறித்த நம்பிக்கைச் சொத்தின் பரம்பரை வழிவரு தர்மகத்தாவானார்.

1993ம் ஆண்டு முதல் கிருஸ்ணமூர்த்தி ஐயாவை 1997 வரையான காலப் பகுதியிலும் நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக பூசகர்களாக நியமித்து தனது சகோதரர்கள் மூலமும் நேரடியாகவும் குறித்த கோயிலையும் அதன் அசையும் அசையாச் சொத்துக்களையும் மனுதாரர் பரம்பரை வழிவரு தர்மகத்தாவாகவும் பரிபாலகராகவும் முகாமையாளராகவும் செயற்பட்டு நிர்வகித்து வரலானார்.

குறித்த மருதோடை பகுதிக்கு 1997முதல் 2006 வரையான காலப்பகுதியில் யாரும் செல்ல முடியாத பிரதேசமாக காணப்பட்டதால் குறித்த கோவிலையோ அதன் ஆதனங்களையோ பராமரிக்க முடியாமல் போனது.

நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாகவும் அமைதியின்மையின் விளை வாகவும் இதன்கீழ் ஆதனஅட்டவணைகளில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை மருதோடை கந்தசாமி கோவில் தேவஸ்தானத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்/ பரம்பரை வழிவரு தர்மகர்த்தா முகாமையாளர்(மனேஜர்). பராமரிப்பாளர் கையேற்பதிலும் பரிபாலனம் செய்வதிலும் தடைகள் காணப்படுவதோடு இதன்கீழ் ஆதனஅட்டவணைகளில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்கள் யாரிடம் ஒப்படைத்தல்/உரித்தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தொடர்பில் ஒரு முறையான முழுமையான ஆவணம் காணப்படாததுடன் குறித்த ஆதனங்கள் தொடர்பில் ஒரு தெளிவற்ற தன்மையும் காணப்பட்டு வருகின்றது.

தற்போது மனுதாரர் மருதோடை கந்தசாமி கோவில் தேவஸ்தானத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் / பரம்பரை வழிவரு தர்மகர்த்தா முகாமையாளர (மனேஜர்). பராமரிப்பாளர் மற்றும் அறங்காவலராக பணியாற்றி வருகின்ற போதும் மனுதாரருக்கு நம்பிக்கைப்பொறுப்பாதனம் உறுதி மூலமோ அல்லது நீதிமன்ற கட்டளை மூலமோ வழங்கப்படாத காரணத்தினால் இந்நம்பிக்கைச் சொத்து உடைமைகள் எவரிடம் உள்ளது என்பது குறித்து தெளிவற்ற தன்மை தோன்றியுள்ளது.

இதன்கீழ் ஆதனஅட்டவணைகளில் விபரிக்கப்பட்டுள்ளஆதனங்களையும் மருதோடை கந்தசாமி கோவில் தேவஸ்தானத்தின் அசையும் அசையா சொத்துக்கள் யாவற்றையும் நம்பிக்கைப் பொறுப்பாளர் / பரம்பரை வழிவரு தர்மகர்த்தா முகாமையாளர்(மனேஜர்). பராமரிப்பாளர் அக மனுதாரரின் பெயரில் ஓர் ஒப்படைத்தற் கட்டளை / உரித்தாக்கற்கட்டளை **(vesting order)** பெறும் நோக்கில் இந்நீதிமன்றில் **நானாவிதம் 30 / 2022** எனும் நம்பிக்கைச்சொத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டு ஒப்படைத்தற் கட்டளை / உரித்தாக்கற்கட்டளை **(vesting order)** பெறுவது தொடர்பில் பத்திரிகையில் விளம்பரப்படுத்துமாறு கௌரவ வவுனியா மாவட்ட நீதிமன்று கட்டளையிட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் மேற்குறித்த மனுதாரருக்கு குறித்த இதன்கீழ் ஆதனஅட்டவணைகளில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களையும் மருதோடை கந்தசாமி கோவில் தேவஸ்தானத்தின் அசையும் அசையா சொத்துக்கள் தொடர்பில் ஓர் ஒப்படைத்தற் கட்டளை/ உரித்தாக்கற்கட்டளை **(vesting order)** ஏன் வழங்கப்படகூடாதென ஆட்சேபனை ஏதுமிருப்பின் 2022 நவம்பர் 18ம் திகதி கௌரவ வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்பகல் ஒன்பது மணிக்கு பிரசன்னமாகி உங்கள்தரப்பு ஆட்சேபனையை தங்கள் தரப்பு சட்டத்தரணி ஊடாக முன்வைக்குமாறு இத்தால் நீவீர் கோரப்படுகின்றீர்கள்.

**முதலாம் ஆதன அட்டவணை**

வடமாகாணம் வவுனியா மாவட்டம் வவுனியா தெற்கு பகுதி கிழக்கு மூலை வடக்கு மருதோடைக்கிராமம் "ஆலடிவளவு" ஏக்கர் 03 றூட் 03 பேர்ச் 36 கொண்ட காணியும் கிணறும் கோவிலும் அதைச் சார்ந்தகட்டிடங்களும் இது நிலஅளவையாளர் திரு.ஏ.இரத்தின்சிங்கம் 06.02.1973ம் திகதியிட்டு 183ம் இலக்கத்தில் தயாரித்தபடத்தில் 6ம் துண்டாககாட்டப்பட்டுள்ளது. இந்த 3 ஏக்கர் 3 றூட் 36 பேர்ச் கொண்ட காணிக்கு எல்லை கிழக்கு குளக்கட்டுக்கு ஒதுக்கப்பட்ட நிலம் மற்றும் அரசாங்க காணி வடக்கு மேற்படி படத்தில் துண்டு 5 எனச்சுட்டப்பட்ட மருதோடைகந்தசாமி கோவில் வளவு மேற்கும் தெற்கும் றோட்டு இதடங்கலும்

**இரண்டாம் ஆதன அட்டவணை**

வடமாகாணம் வவுனியா மாவட்டம் வவுனியா தெற்கு பகுதி கிழக்கு மூலை வடக்கு மருதோடைக்கிராமம் "ஆலடிவளவு" ஏக்கர் ஒன்றரை எல்லை கிழக்கு முடிக்குரிய நிலம் வடக்கு மருதோடை கந்தசாமிக்குரியவாதனம் (முதலாம் ஆதனஅட்டவணை) மேற்கு றோட்டு தெற்கு றோட்டு இவ் வெல்லைக்கு உட்பட்ட நிலம்.

**மூன்றாம் ஆதன அட்டவணை**

வடமாகாணம் வவுனியா மாவட்டம் வவுனியா தெற்கு பகுதி கிழக்கு மூலை வடக்கு மருதோடைக்கிராமம் "கையறுப்பான்" இதற்காக 1973ம் ஆண்டு மாசி மாதம் 06ந் திகதி உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எ. இரத்தினசிங்கத்தால் 183ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி 05ம் இலக்க துண்டாக சுட்டப்பட்ட ஏழு ஏக்கர் ஒரு றூட் பதினொரு பேர்சஸ் (ஏக்கர் 07 றூட் 01 பேட்சஸ் 11 )எல்லை கிழக்கு குளக்கட்டுக்கு ஒதுக்கப்பட்ட நிலம் வடக்கு முடிக்குரிய காடு மேற்கு சின்னக் குளத்துக்குப் போகும் கிராமச் சபை வீதி தெற்கு குறித்த படத்தில் 6ம் துண்டாக சுட்டப்பட்ட மருதோடை கந்தசாமி கோவிலாதனம் இதடங்கலும்

**நான்காம் ஆதன அட்டவணை**

வடமாகாணம் வவுனியா மாவட்டம் வவுனியா தெற்கு பகுதி கிழக்கு மூலை வடக்கு மருதோடைக்கிராமம "பெரியவெளி" இதற்காக 1973ம் ஆண்டு மாசி மாதம் 6ந் திகதி உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எ. இரத்தின சிங்கத்தால் 183ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டபடத்தின் படி 3ம் இலக்க துண்டாக சுட்டப்பட்ட மூன்று ஏக்கர் இரண்டு றூட்( ஏக்கர் 03 றூட் 02 ) இதற்குஎல்லை கிழக்கு கிராமச் சபை வீதி வடக்கு குறித்த படத்தில் 4ம் இலக்கதுண்டாக சுட்டப்பட்ட ஆதனம் மேற்கு பொன்னன் பெண் சின்னப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்கு முரியவாதனம் தெற்கு எஸ்.கோவிந்தராஜாவிற்குரிய ஆதனம் இதடங்கலும்

**ஐந்தாம் ஆதன அட்டவணை**

வடமாகாணம் வவுனியா மாவட்டம் வவுனியா தெற்கு பகுதி கிழக்கு மூலை வடக்கு மருதோடைக்கிராமம "புரன்வெளி" இதற்காக உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எ.இரத்தினசிங்கத்தால் 1973ம் ஆண்டு மாசி மாதம் 6ந் திகதி 183ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டபடத்தின் படி 2ம் இலக்கத் துண்டாக சுட்டப்பட்ட ஒரு ஏக்கர் மூன்று றூட் இருபத்தேழு பேர்சஸ்( ஏக்கர் 01 றூட் 03 பேர்சஸ் 27 ) இதற்கு எல்லை கிழக்கு குறித்த படத்தின் 3ம் இலக்க துண்டாக சுட்டப்பட்ட ஆதனமும் எஸ்.செல்லப்பாவிற்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும் வடக்கு சின்னையா செல்லப்பாவுக்கும் மறுபேருக்கு உரியவாதனம் மேற்கு வாங்கற்காரருக்குரிய ஆதனம் 1ம் இலக்க துண்டாகசுட்டப்படும் ஆதனமும் முடிக்குரிய காடும் தெற்கு பொன்னன் பெண் சின்னப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்கும் உரியவாதனம் இதடங்கலும்.

**ஆறாம் ஆதன அட்டவணை**

வடமாகாணம் வவுனியா மாவட்டம் வவுனியா தெற்கு பகுதி கிழக்கு மூலை வடக்கு மருதோடைக்கிராமம் "பாளையடிக்கமம்" இதன் விசாலம் ஏக்கர் 04 றூட்ஸ் 00 பேர்சஸ் 14 இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எ.இரத்தினசிங்கத்தால் 1973ம் ஆண்டு மாசி மாதம் 6ந் திகதி 183ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டபடத்தின் படி 1ம் இலக்கத் துண்டாக சுட்டப்பட்டுள்ளது இதற்கு எல்லை கிழக்கு குறித்த படத்தில் 2ம் இலக்க துண்டாக சுட்டப்பட்ட மருதோடை கந்தசாமி கோவிலாதனம் வடக்கு அரச காடு மேற்கு சின்னையா செல்லப்பாவுக்குடைய ஆதனம் தெற்கு பொன்னன் பெண் சின்னப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்கும் உரியவாதனம் இதடங்கலும்

**ஏழாம் ஆதன அட்டவணை**

வடமாகாணம் வவுனியா மாவட்டம் வவுனியா தெற்கு பகுதி கிழக்கு மூலை வடக்கு மருதோடைக்கிராமம் "நாவலடிக்கமம்" இதன் விசாலம் ஏக்கர் 3 றூட்ஸ் 00 பேர்சஸ் 04 இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எ.இரத்தினசிங்கத்தால் 1973ம் ஆண்டு மாசி மாதம் 6ந் திகதி 183ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டபடத்தின் படி 04ம் இலக்கத் துண்டாக சுட்டப்பட்டுள்ளது எல்லை கிழக்கு வீதி வடக்கு வீதி முடிக்குரிய நிலம் மேற்கு சின்னையா செல்லப்பாவுக்கும் தவராஜசிங்கத்திற்குமுரிய ஆதனம் தெற்கு குறித்த நிலஅளவைப்படத்தில் 3ம் இலக்க துண்டாக சுட்டப்பட் மேற்சொல்லிய 5ம் ஆதனம் இது முழுவதும்

**வரைந்தவர்**
**கைலாயநாதன் சுபாகர் சட்டத்தரணி**
M.P.**கனேஸ்வரன் சட்டத்தரணி**

**நீதிமன்ற உத்தரவுப்படி**

**பதிவாளர்**
**மாவட்ட நீதிமன்றம்**
**வவுனியா**

# ‘வட்ஸ் அப்’ திடீர் முடக்கம்

வொஷிங்டன், ஒக். 26

இந்தியா, இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் நேற்று ‘வட்ஸ் அப்’ சேவை திடீரென 30 நிமிடங்களுக்கு மேல் முடங்கியதால் பயனர்கள் அவதிக்குள்ளாகினர்.

பேஸ்புக், இன்ஸ்டாகிராம் போல தற்போது உலகம் முழுவதும் அதிகம் பேர் பயன்படுத்தும் செயலிகளில் ஒன்றான ‘வட்ஸ் அப்பை’ பில்லியன் கணக்கான மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில் நேற்று ‘வட்ஸ்அப்’ திடீரென 30 நிமிடங்களுக்கு முடங்கியது. ஆயினும் முடக்கத்துக்கான காரணம் குறித்து ‘வட்ஸ் அப்’ நிறுவனம் விளக்கமளிக்கவில்லை. (ச-இ)

### சட்டவிரோதமாக
# மாட்டை இறைச்சியாக்கிய நபரொருவர் கைதானார்!

யாழ்ப்பாணம், ஒக். 26

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதகல் - சகாயபுரம் பகுதியில் சட்ட விரோதமாக மாட்டை இறைச்சியாக்கிய நபரொருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே 48 வயதுடைய மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டார். அத்துடன் சம்பவ இடத்திலிருந்து 20 கிலோகிராம் மாட்டு இறைச்சியையும் பொலிஸார் மீட்டுள்ளதுடன், குறித்த சந்தேகநபருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-125)

**மாபிள் வேலை**
உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி – 80 ரூபாய் பூச்சுவேலை, கட்டுவேலைகளும் செய்துதரப்படும்.
**077 334 1281** (CS 918) (3/6)

**தவறவிடப்பட்டுள்ளது**
கொக்குவில் ஆடியபாதம் வீதியில் HIACE வானுக்குரிய (63-2078) வாகன காப்புறுதிப்பத்திரம். வரிப்பத்திரம் ஆகியவை தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (CS 47306 ) (3/6)
தொடர்பு: **077 923 4242**

**மாபிள் சுத்திகரிப்பு**
சமையல் அறை. குளியல்அறை. மலசல கூடங்கள் ஆகியவற்றின் மாபிள்களை சிறந்த முறையில் சுத்திகரிப்பு செய்து தரப்படும். (CS 21369 ) (3/6)
தொடர்பு: **077 803 3199**

**மணமக்கள் தேவை**
யாழ்.றோமன் கத்தோலிக்கம். 28 வயது. கௌரவ குடும்ப பெண்ணிற்கும் யாழ்.இந்து 27 வயது பூரம் 2 பாதம் பட்டதாரி பெண்ணிற்கும் உள்ளூரில் உயர் அரசசேவை மணமகன்கள் தேவை.
கனடாவில் வசிக்கும். 33 வயது. யாழ்.இந்து மணமகனுக்கு அழகிய. கனடாவில் வசிக்கும் மணப்பெண் தேவை.
தொடர்புகட்கு - **0763081532**

**சுத்திகரிப்பாளர் தேவை**
சுத்திகரிப்பாளர் தேவை.
ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (CR38361)(3/6)

**நரம்பியல் புனர்வாழ்வு சிகிச்சை நிலையம்**
**Institute of Medical Sciences - Green Memorial Hospital**
**மானிப்பாய்.**
**தொடர்பு**
**076 047 7106, 021 225 6990**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### மருத்துவர்களை...

பட்டுள்ளன. இந்த விசாரணைகளுக்காகத் தனிக்குழு அமைக்கப்பட்டுள்ளது என்று பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எம்.மகேந்திரன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- யாழ்ப்பாணத்தில் மருந்து விற்பனை நிலையங்கள் மீது உணவு மற்றும் மருந்துப் பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் பரிசோதனை நடவடிக்கையின்போது வவுனியாவில் உள்ள அரச மருத்துவர் ஒருவர் தனது தனியார் மருத்துவமனையின் பெயரில் போதை மாத்திரைகளை கொள்வனவு செய்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக எமக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் எமக்கு அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளது. இது தொடர்பில் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறித்த மருத்துவர், அவருக்குச் சொந்தமான தனியார் மருத்துவமனை மற்றும் அவர்களிடமிருந்து மாத்திரைகளைப் பெற்றுக்கொண்டவர்கள் தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறித்த போதை மாத்திரைக் கொள்வனவு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றமையால் வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் இரண்டு மாவட்டங்களையும் உள்ளடக்கி விசாரணை செய்ய விசேட குழு ஒன்றை நியமித்துள்ளது. விசாரணைகள் நிறைவடைந்த பின் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-ம-18)

### ஹெரோய்னுடன்...

கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 750 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடியதை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் அம்பிகைநகர் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடையவர். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன - என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-ம-23)


## 23ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சுவாமிநாதர் சிறிபாஸ்கரன்

பிறப்பு
07.01.1932

இறப்பு
26.10.1999

திருமதி பாலாம்பிகை
சிறிபாஸ்கரன் (மனைவி)

## வேலைவாய்ப்புக்கள்

வவுனியா நெளுக்குளத்தில் இயங்கிவரும் **கால்நடைப் பண்ணையில்** கீழ்வரும் பணிவெற்றிடங்களுக்கு தங்கி நின்று பணியாற்றக்கூடிய வேலையாட்கள் உடன் தேவை.

* சமையல் வேலை (ஆண்/ பெண்)
* தோட்ட வேலை (ஆண்/பெண்)
* சாரதி வேலை (உழவு இயந்திரம் - ஆண்)
* கால் நடை பராமரிப்பு (ஆண்/பெண்)
* பழுது பார்த்தல் (வயறிங். தச்சுவேலை. வெல்டிங். பெயின்டிங் - ஆண்)
* வீடு பராமரித்தல் (ஆண்/பெண்) குடும்பமாகத் தங்கி நிற்கவேண்டும்
* வயது 35 - 55 வயது வரை
* சம்பளம் வேலைக்கும். தகுதிக்கும் ஏற்ப நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(cs 1045) (3/6)

தொடர்புகளுக்கு: 076 409 0828

## டாக்டர் ஆவது உங்கள் கனவா ?

# M.B.B.S 2023 INTAKE

உலக சுகாதார நிறுவனம்,பொதுநலவாய நாடுகளினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள். உள்நாட்டு அனுமதிக் கட்டணங்கள் மட்டுமே !!

பகுதியான கொலஷிப் கிடைக்கும்

உடனடி வேலைவாய்ப்பு UK,USA,Australia, Canada Min.Salary 5000 USD

## பங்களாதேஷ் / மலேசியா

(5 Years + 1 வருட பணி அனுபவத்துடன்)

State Universities -

- கவர்ச்சிகரமான கல்விக் கட்டணங்கள்
- சிறந்த வசதிகளை கொண்ட விடுதிகள்

2018 O/L & 2021 A/L (Local)
2019 O/L & 2022 A/L (London)
பரீட்சை பெறுபேறுகளை எதிர்பார்த்து இருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்

ஒப்ரிமா சர்வதேச கல்லூரி - மலேசியா

Foundation in Arts & Science | Modern Languages | Hospitality & Tourism | Opportunity to go overseas (internship or employment)

அழையுங்கள் : 0777348049 / 0757213200

Global Education Training & Services (GETS)
No. 315/A, Negombo Road, Kandana | Web : www.getslanka.com
Email : getslanka@gmail.com

max adz


## முசலி பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல்- 2023

முசலி பிரதேச சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட மாட்டிறைச்சிக் கடைகளுக்கான 2023ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான (01.01.2023 – 31.12.2023) கேள்வி கோரப்படுகின்றது.

**கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 26.10.2022 – 15.11.2022 ந.ப 12.00 மணி வரை**
**கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 15.11.2022 பிற்பகல் 2.15 மணி வரை**
**கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 15.11.2022 பிற்பகல் 2.30 மணி (செவ்வாய்கிழமை)**

கேள்விப்பிணைப்பணம், கேள்விப்பத்திரக்கட்டணம் ஆகியவைகளை முசலி பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் மு.ப 9.30 மணி தொடக்கம் பி.ப 2.00 மணி வரை செலுத்தி கேள்வி படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி விண்ணப்பப்பத்திரங்கள் பூர்த்திசெய்யப்பட்டு "தலைவர்/செயலாளர், முசலிப் பிரதேச சபை, சிலாவத்துறை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ கையளிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "................. மாட்டிறைச்சி கடைக்கான கேள்வி 2023" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியாகிய 15.11.2022 பிற்பகல் 2.15 மணிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது .

விண்ணப்பப்பத்திரங்கள் 15.11.2022ஆந் திகதி பிற்பகல் 02.15 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு கேள்விகள் பிற்பகல் 02.30 மணிக்கு முசலிப் பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும். இச்சந்தர்பத்தில் கேள்வியாளர்கள் அல்லது அவரது அனுமதிக்கப்பட்ட கடிதத்துடன் பிரதிநிதிகள் உடன் இருக்க அனுமதிக்கப் படுவார்கள்.

சித்திகரமான கேள்விகாரர் 2023 ஆம் ஆண்டிற்கு முசலிப் பிரதேச சபை மாட்டிறைச்சிக்கடைகளில் இறைச்சி விற்பனை செய்வதற்கு கேள்வி சபையால் / அரச விலைக் கட்டுப்பாட்டு திணைக்களத்தால் தீர்மானிக்கின்ற விலைகளில் இறைச்சி விற்பனை செய்யப்படல் வேண்டும்.

முசலி பிரதேச சபையினால் கேள்விகள் ஏற்கும் நிராகரிக்கும் உரிமை தலைவருக்கும் கேள்விசபைக்கும் உரியது. குத்தகை நிலுவைகளை கொண்டிருப்போர், கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் கேள்விகோர அனுமதிக்கப்படமாட்டார்கள்.

கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை/தகவல்களை பிரதேச சபையின் பிரதான அலுவல கத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | குத்தகை விபரம் | மீளளிக்கமுடியாத கேள்விப்பத்திர கட்டணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 01 | வேப்பங்குளம் | 1000.00 | 9,000.00 | 469,700.00 |
| 02 | P.P பொற்கேனி | 1000.00 | 5,000.00 | 235,400.00 |
| 03 | அகத்திமுறிப்பு | 1000.00 | 10,000.00 | 515,900.00 |
| 04 | பண்டாரவெளி | 1000.00 | 8,000.00 | 398,200.00 |
| 05 | அரிப்பு | 1000.00 | 10,000.00 | 514,800.00 |
| 06 | சிலாவத்துறை | 1000.00 | 15,000.00 | 732,600.00 |
| 07 | கொண்டச்சி | 1000.00 | 7,000.00 | 333,300.00 |
| 08 | மறிச்சுக்கட்டி | 1000.00 | 11,000.00 | 569,800.00 |
| 09 | புதுவெளி | 1000.00 | 5,000.00 | 225,500.00 |

திரு ஏ.ஜீ.எச்.சுபிஹான்
தவிசாளர்
பிரதேச சபை முசலி

(25.10.2022)

(CR 38358)(3/6)


# பணி நயப்பு வாழ்த்து

யா/ நீர்வேலி றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பப் பிரிவின் சிரேஸ்ட ஆசிரியராக **23 வருடங்கள்** கடமையாற்றி 26.10.2022 அன்று **55 அகவையில்** ஓய்வுபெறும்.



செல்வி
சீவரட்னேஸ்வரி
சபாரத்தினம்
(SLTS - I)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

"மழலைகளின் கைபிடித்துஎழுதிப் பழக்கி
உயரிய பதவிகள் வகிக்கச் செய்தவர்
சீரிய உணவைச் சிறார்கள் புசித்திட
நேரிய திட்டம் வகுந்த நிந்தன்
சேவைக்கு விடை கூற முடியாது"

இவர் எமது பாடசாலையில் ஆற்றிய சேவையைப் பாராட்டுவதோடு இவரது, ஓய்வுக்காலம் சிறப்புற அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

*வாழ்த்துவோர்*

**ஆசிரியர் கழகம்,
பழைய மாணவர் சங்கம்
பாடசாலை அபிவிருத்திக்குழு
யா/ நீர்வேலி றோ.க.த.க
பாடசாலை**

(CS 21332) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** ஆதாயமான நிலை உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நீங்கள் எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி வந்து உங்களை மகிழ்விக்கும்.

**இடபம்:** எதிர்பார்த்த ஆதாயம் வந்து சேரும். மனதில் தைரியம் பிறக்கும். தடைகளைச் சரிசெய்வீர்கள். முயற்சியில் உங்கள் முன்னேற்றம் உண்டாகும்.

**மிதுனம் :** முன்னோர் வழிபாடு மகிழ்ச்சி தரும். சுபச்செலவு அதிகரிக்கும். அதற்கேற்ப வரவு ஏற்படும். எதிர்பார்த்த வருமானம் வரும். புதிய முயற்சி வெற்றி பெறும்.

**கடகம்:** தைரியம், தன்னம்பிக்கை உண்டாகும். துணிச்சலுடன் செயற்படுவீர்கள். நெருக்கடிகளை எல்லாம் சமாளித்து நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். சங்கடம் தீரும்.

**சிம்மம்:** உங்கள் செயல்களில் எதிர்பார்த்த வரவு வந்து சேரும் லாபமான நாள். பழைய பிரச்சினைகளை சரிசெய்வீர்ளகள். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். திறமை வெளிப்படும்.

**கன்னி:** வரவுகளில் இருந்த தடை அகலும். குடும்பத்தில் உற்சாகம் அதிகரிக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**துலாம்:** இனம் புரியாத குழப்பம் உண்டாகும். எதிர்பாராத சம்பவம் நடைபெறும். குடும்பத்தின் நலனுக்கான ஒரு முடிவை துணிச்சலுடன் மேற்கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** எதிர்பாராத செலவு, அலைச்சல் உண்டாகும். செயலில் கவனம் வேண்டும். வாழ்க்கைத் துணையுடன் உண்டான பிரச்சினை விலகி மகிழ்ச்சி அடைவீர்கள்.

**தனுசு:** நிதி நிலையில் இருந்த சங்கடம் நீங்கும். பணவரவால் மகிழ்வீர்கள். திட்டமிட்டு செயற்பட்டு தேவைகளை நிறைவேற்றுவீர்கள். ஆதாயம் கூடும். குடும்பத் தேவை நிறைவேறும்.

**மகரம்:** தொழிலில் ஏற்பட்ட பிரச்சினைகளை சரிசெய்து லாபம் காண்பீர்கள். போட்டியாளர் விலகிச் செல்வர். பொருளாதார நிலை உயரும். எண்ணம் நிறைவேறும்.

**கும்பம்:** நண்பர்களின் ஆதரவால் செயல் நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்டநாளாக நீங்கள் எதிர்பார்த்திருந்த ஒரு தகவல் வந்து சேரும். முயற்சி நிறைவேறும்.

**மீனம்:** பேச்சு, செயலில் கவனம் தேவை. யோசித்து செயற்பட வேண்டிய நாள். நினைப்பதை செயற்படுத்த முடியாமல் போகும். குழப்பம் அதிகரிக்கும். நிதானம் அவசியம்.

## அரசியல்...

கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த மூன்று தமிழ் அரசியல் கைதிகள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.
சிவகுமார், ஷாம் சிவலிங்கம், ஏ.ஆனந்தன் ஆகிய அரசியல்கைதிகளே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர்.
இவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தகுந்த முறையில் நிரூபிக்கப்படவில்லை என்பதாலும், குற்றங்களை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் இல்லாத காரணத்தாலும் அவர்கள் கொழும்பு நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-22)

## இளைஞர்களின்...

இளைஞர்களும் மதுசாரம் மற்றும் ஐஸ் போதைப் பொருள் என்பவற்றைப் பாவித்தமை உடற்கூற்றுப் பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் இரவு தோட்டக் கிணற்றில் இருந்து மேற்படி இரு இளைஞர்களும் சடலங்களாக மீட்கப்பட்டனர். இருவரது சடலமும் மந்திகை ஆதார மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி சட்ட மருத்துவ நிபுணர் க.வாசுதேவா முன்னிலையில் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன்போதே குறித்த இரு இளைஞர்களும் மதுசாரம் மற்றும் ஐஸ் போதைப் பொருள் என்பவற்றைப் பாவித்தமை கண்டறியப்பட்டதுடன், அவர்கள் தண்ணீரில் மூழ்கியதால்தான் இறப்புச் சம்பவித்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-ம-26)

## மாணவர்கள்...

இவ்வாறு தெரிவித்தார். போரால் பாதிக்கப்பட்ட வடமாகாணத்தின் கல்வி, கொரோனாப் பெருந்தொற்றாலும் தற்போது ரணில், ராஜபக்ச அரசாங்கத்தின் செயற்பாடுகளாலும் மேலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனினும் இதைச் சரிசெய்வதற்கு அரசாங்கத்திடம் எந்தத் திட்டங்களும் இல்லை.
மோசமான பொருளாதாரத்தின் ஒரு பகுதியாகவே மாணவர்களின் இடைவிலகல் பார்க்கப்பட வேண்டும். நாளாந்தம் 400 ரூபாவையும் அதற்கு மேலும் போக்குவரத்துக்காகச் செலவளித்துப் பாடசலைக்கு வரும் மாணவர்கள் ஏராளமானோர் உள்ளனர்.
நிலைமை இவ்வாறிருந்தால் இடைவிலகல் அதிகரிப்பதில் என்ன ஆச்சரியம்? இதற்குத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால், அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான திராணி இந்த அரசாங்கத்திடம் உள்ளதா என்று கேட்டால் இல்லை என்பதுதான் பதில். இலவசப் பாடப்புத்தகங்களை வழங்குவதற்கு அரசாங்கத்திடம் பணம் இல்லை. இலவச சீருடைகளை வழங்குவதற்குப் பணம் இல்லை. எந்தவொரு காத்திரமான திட்டங்களும் அரசாங்கத்திடம் இல்லை - என்றார். (அ-ம)


## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை

உப அலுவலகம் - மல்லாகம்
விண்ணப்பதாரியின் பெயர் - திரு கிருஸ்ணலிங்கம் கைம்பெண் சுலோசனா
முகவரி - பொன்னிப்புலம் வீதி அளவெட்டி

குறித்த ஆதனமானது வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் ஆதனப்பதிவேட்டில் வட்டாரம் 12 பொன்னிப்புலம் வீதி ஆதன இலக்கம் - 34. இல் அமைந்துள்ள மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை "தடுவங்கலட்டி" என்ற ஆதனம். உரிமைகோருபவர் சொந்தக்காரர் என்ற பெயரில் ஆதன பதிவேட்டில் பதியப்பட்டுக்காணப்படுகின்றது.

மேலும் வலிகாமம் வடக்குபிரதேச செயலகம் தெல்லிப்பளை அளவெட்டி மேற்கு J/220 கிராமசேவையாளர் பிரிவிற்குட்பட்டதாகும்.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு திருமதி காயத்திரி அகிலன் முகதாவில் நிறைவேறிய 1604 ஆம் இலக்க 15.09.2020 ஆம் திகதிய உறுதி மூலம் யாழ்ப்பாணம் நீர்வேலி. நீர்வேலி மேற்கு இராஜவீதியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சுயதீப் என்பவர் கிருஸ்ணலிங்கம் கைம்பெண் சுலோசனா என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

1604 ஆம் இலக்க உறுதியின் தாய்உறுதிகளின் ஒன்றாகக் காணப்பட்ட பிரசித்த நொத்தாரிசு ந.தம்பிமுத்தன் அவர்களால் எழுதப்பட்ட 10.10.2009 ஆம் திகதிய 7015 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தொடர்பில் 7015 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியில் பொன்னையா சுந்தரலிங்கத்தின் தகப்பன் வழிப்பாட்டனார் பெரியதம்பி கார்த்திகேசு என்றும் அவர் பின்பு காலஞ்சென்று போக அவரின் மூன்று பிள்ளைகளில் ஒரு பிள்ளையாகிய பெண் பிள்ளைக்கு சீதனம் கொடுக்கப்பட்டதால் அவர் நீங்கலாக மிகுதி இரண்டுபிள்ளைகளாகிய எனது தகப்பனாருக்கும் அவரது தமையனாருக்கும் குறித்த ஆதனம் முதுசமாகச் சொந்தமாக வந்ததென்றும் எனது தகப்பனாரின் குறித்த தமையனார் திருமணமாகியும் சந்ததியின்றி இருந்து வந்ததாலும் எனது தகப்பனாருடன் இருந்து பராமரிக்கப்பட்டுவந்ததாலும் எனது தகப்பனாருக்கு அவர் தனது முதுசப்பாகத்தை வாய்மூலமாக நன்கொடை கொடுத்திருந்தார் என்றும் ஆனாலும் இது தொடர்பாக அப்போது உறுதி எதுவும் முடிக்கப்படவில்லையென்றும் எனது தகப்பனாரின் தனது முதுசப்பாகத்தையும் தனக்குத் தமையனார் வாய்மூலமாக அளித்திருந்த முதுசபாகத்தையும் சேர்த்து முழு ஆதனத்தையும் தனது சொந்தமாக வைத்து ஆண்டனுபவித்து வந்தாரென்றும் எனது தனப்பனார் உயிரோடிருந்தபொழுது குறித்த முழு ஆதனத்தையும் எனக்கு வாய்மூலமாக நன்கொடையளித்தாரென்றும் இது தொடர்பாகவும் அப்போது உறுதி எதுவும் முடிக்கப்படவில்லை என்றும் உறுதி எதுவும் முடிக்கப்படாதிருந்தபோதும் குறித்த ஆதனம் நீண்டகாலமாக எனது பிசகு தடையற்ற ஆட்சியில் இருந்து வருகின்றதென்றும் இதில் வேறு எவருக்கும் எவ்வித உரித்தும் இல்லையென்றும் இந்த விபரங்களை வெளிப்படுத்தப்பட்டுக்காணப்படுகின்றது.

**ஆதனவிபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்றும் அளவெட்டி இறையுமான "தடுவங்கலட்டி" என்ற நிலப்பரப்பு 05 குழி 15.15. இது நிலஅளவையாளர் மா.சிற்றம்பலம் அவர்களால் வரைந்த 2267B/10.08.2008 இலக்க வரைபடத்தில் துண்டு 01. என காட்டப்பட்டுள்ளது.

**இதன் எல்லைகள்.**

கிழக்கு - வழிவாய்க்கால் முகப்பும் சுப்பிரமணியம் பெண் மங்கையற்கரசிற்கும் செல்லப்பா நவரத்தினத்திற்குரிய ஆதனம்
வடக்கு - ஒழுங்கை
மேற்கு - ஒழுங்கை
தெற்கு - அளவெட்டி வடக்கு ஞானவைரவர் சனசமூகநிலைய ஆதனம்.

இவ்வாதனத்தை கிருஸ்ணலிங்கம் கைம்பெண் சுலோசனா என்ற பெயரில் மாற்றம் செய்வது தொடர்பில் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலமாகவோ நேரடியாகவோ உரிய ஆவணங்களை சமர்ப்பித்தும் வெளிநாட்டில் இருப்பவர்கள் உறவினர்கள் மூலமாக ஆவணங்களை சமர்ப்பித்தும் தெரியப்படுத்தலாம். ஆட்சேபனை ஏதும் வராதவிடத்து இவ்வாதனத்தை கிருஸ்ணலிங்கம் கைம்பெண் சுலோசனா என்ற பெயரில் உரிமைமாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதனால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சோமசுந்தரம் சுகிர்தன்
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

(CS 21377 (4x25) 1



## 6ஆம் மாத நினைவஞ்சலி



மண் மகிழ 06.03.1974
கண் நெகிழ 01.05.2022

அமரர்
### துரைராஜா அருந்தவசீலன்
(அதிபர்-கிளி/கரியாலை நாகபடுவான் அ.த.க.பாடசாலை இல.2)

அன்பின் திருவுருவே எங்கள் அப்பா
பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் உறைவிடமாய்
அன்பின் இலக்கணமாய், அறிவின் சிகரமாய் - உம்
பள்ளியையும் மாணவர்களையும்
கண்ணென கருதி - அவர்களுக்கு
நல்வழிகாட்டி ஒளியேற்றிவிட்டு - ஏன்
எம்மை எல்லாம் தனியாக தவிக்கவிட்டு
வெகுதூரம் சென்றீர்.

உங்கள் பிரிவால் வாடும்
அன்பு மனைவி மற்றும் மகன்.

சிற்றம்பலம் வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

(CS 21381) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மக்களை குடியேற்றவா வலி.வடக்கில் காணி சுவீகரிப்பு?

## சிறீதரன் எம்.பி.கேள்வி

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ்ப்பாணத்தின் விவசாய வளம் மிகுந்த வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் சிங்கள மக்களை குடியேற்றுவதற்காகவா பலாலி விமான நிலையம் என்ற போர்வையில் அரசாங்கம் காணி களை சுவீகரிக்க முயற்சிக்கின்றது?

இவ்வாறு நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கில் இராணுவத்தினர் வசமுள்ள மக்களுக்குச் சொந்தமான நிலங்களை முழுமையாகச் சுவீக ரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படு கின்றது.

வலிகாமம் வடக்கில் மீனவர்களின் நிலம் 212 ஏக்கரும், பலாலி வீதிக்கு கிழக்கே உள்ள 612 ஏக்கரும் விடுவிக்கப்படும் என நீண்ட காலமாகத் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது முழுமையாக இராணுவ மயமாக்க முயற்சிக்கப்படுகிறது.

இதுதொடர்பில் தொடுக்கப்பட்ட வழக்கின் அடிப்படையில் மாவிட்டபுரம், காங்கேசன்துறை பகுதிகளிலே சில காணிகள் கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் 2019க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் விடுவிக்கப்பட்டன.

ஆனால் தற்போது மயிலிட்டிப் பகுதியிலேயே பலாலி விமான நிலையத்தை அண்டிய பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்டு இராணுவ அரண்கள் அமைக்கப்பட்டு தமிழர்களின் பூர்வீக நிலங்களில் இராணுவத்தினர் பயிர்ச்செய்கை மேற்கொள்கின்றனர்.

இந்தக் காணி சுவீகரிப்புக்கள் சிங்கள மக்களைக் கொண்டு வந்து குடியேற்றுவதற்காகவா இடம்பெறுகின்றன? என்ற சந்தேகம் எழுகின்றது. இதுதொடர்பில் எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ள வழக்கில் சாதக முடிவுகளை எதிர்பார்க்கின்றோம்- என்றார். (ச-125)

### யாழ்ப்பாணம்...

அனுபவம் வாய்ந்த பெண்ணியவாதியுமான மைத்திரி விக்கிரமசிங்க எதிர்வரும் 28ஆம் திகதி, வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள 'பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தின் ஊடாகப் புதிய இயல்பு நிலையில் நிலைபேறான அபிவிருத்தியை அடைதல்' என்ற தலைப்பிலான ஆய்வு மாநாட்டில் கலந்துகொண்டு முதன்மை உரை ஆற்றுவதற்காகவே அவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

'புதிய இயல்பு நிலையில் எதிர்காலத்தைச் செழுமைப்படுத்தல்' என்ற தொனிப் பொருளில் நடத்தப்பட்டு வரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சர்வதேச ஆய்வு மாநாட்டுத் தொடரில், பல்கலைக்கழக பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவ நிலையத்தால் 'பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தின் ஊடாகப் புதிய இயல்பு நிலையில் நிலைபேறான அபிவிருத்தியை அடைதல்' என்ற தலைப்பிலான ஆய்வு மாநாடு எதிர்வரும் 28ஆம் திகதி, வெள்ளிக்கிழமை கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவ நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் சிவாணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆய்வு மாநாட்டின் முதன்மை உரையாளராக திருமதி மைத்திரி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்ளவுள்ளார். (அ-ம)

### தமிழர்களின்...

'தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு புதிய அரசமைப்பு மூலம் கிடைக்கும். ஒரு வருடத்துக்குள் இந்தப் பணிகள் முற்றுப்பெறவேண்டும் என்பதே எனது நோக்கம்' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்த நிலையில் பிரதமர் நேற்று மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

'புதிய அரசமைப்பு, தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி திறந்த மனதுடன் அனைவருடனும் பேச ஆரம்பித்துள்ளார். எனவே, தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் கட்சி, பேதமின்றி மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படவேண்டும்.

காலத்தை இழுத்தடிக்காமல் புதிய அரசமைப்பு மூலம் தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதுதான் ஜனாதிபதியின் விருப்பம். அதனால்தான் ஒரு வருடத்துக்குள் தீர்வுக்கான பணிகள் நிறைவுபெறவேண்டும் என்ற கால வரையறையை ஜனாதிபதி விதித்துள்ளார்' - என்றார். (அ-ம-22)

### பிரிட்டன்...

பதவியேற்பை அடுத்து கடந்த ஐம்பது நாள்களில் மூன்று பிரதமர்களை பிரிட்டன் சந்தித்துள்ளது.

பிரிட்டனில் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்பு பிரதமராகப் பதவியேற்ற லிஸ் ட்ரஸ் கடந்த 20ஆம் திகதி தனது பதவியில் இருந்து விலகினார். பொருளாதார நெருக்கடியை தீர்க்க அவர் எடுத்த நடவடிக்கைகளுக்குச் சொந்தக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் இந்த முடிவை அவர் எடுத்தார். இதையடுத்து ஆளும் கென்சர்வேடிவ் கட்சி ரிஷி சுனக்கை தலைவராக நேற்றுமுன்தினம் தெரிவுசெய்தது. கட்சித்தலைவரே பிரிட்டனில் பிரதமராகலாம். ஆதலால், சுனக் பிரதமராவது உறுதியானது. நேற்று அவர் பதவியேற்பார் என்றும் அறிவிக்கப்பட்டது. இதன்படி நேற்று பிரிட்டன் மன்னர் சாள்ஸ் முன்னிலையில் பிரிட்டன் பிரதமராக சுனக் பதவியேற்றார்.

முன்னாள் பிரதமர் போரிஸ் ஜோன்சனும் பொருளாதார நெருக்கடியைத் திறம்படக் கையாளவில்லை என்ற குற்றச்சாட்டில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் பதவியில் இருந்து விலகியிருந்தார். இதனால் கடந்த 50 நாள்களில் மூன்று பிரதமர்களை பிரிட்டன் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள QB XXXX இலக்கத்தை கொண்ட பஜாஜ் முச்சக்கர வண்டி விற்பனைக்கு உண்டு. (CS 21368) (3/6)

தொடர்பு: 077 573 2563

**Chemistry இரசாயனவியல்**

பிரபல பாடசாலையில் கற்பிக்கும் விஞ்ஞானபட்டதாரி ஆசிரியரால் தனி or குழு or Zoom வகுப்புக்கள் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலத்தில் கற்பிக்கப்படும்.

தொடர்புகட்கு - 0767781442

அமெரிக்க லொத்தர் இலவச விசா

ஏமாற்றுங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்

Passport அவசியமில்லை

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்

**V2 Travels**

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்

0768226244

**VACANCY**

Data Entry Operator,
Telephone Operator,
Receptionist,
Marketing Executive,
Management Trainee

(CS21366) (3/6)

077 773 3368, 074 138 3368

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 120 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் கார்பெட் வீதியில் தண்ணீர்த் தாங்கி அருகில் இரண்டு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.

பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து 1 1/2 KM தூரம்.

மேட்டு நிலம். விவசாயம் செய்வதற்கு, வீடு கட்டுவதற்கு உகந்த நிலம்.

நல்ல சூழல். நன்னீரூற்று.

1 பரப்பின் விலை முன்பகுதி 200,000/=, பின்பகுதி 150,000/=,

(தரகர் தேவையில்லை. பார்வையிடும் நேரம் : 8.00am - 5.30pm)

தொடர்புகளுக்கு: 077 623 4204, 077 288 0152, 077 076 0389

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு

- ஒட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்(காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி) யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ். பஸ்நிலையத்திலிருந்து 1 1/2 KM தூரம்
- பார்வையிடும் நேரம்: காலை 08.00 - மாலை 5.30
- ஒரு பரப்பின் விலை : 6 இலட்சம் ரூபா

தொடர்பு: 077 874 8135, 077 408 2649, 076 436 5814

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு.

- நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்
- வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்:-

- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.

தொடர்பு:- ஜெயம்

077 986 5457

077 814 7389

**தேவை**

யாழ். நகரில் இயங்கும் கோகோ கோலா நிறுவனத்தின் ஏக விநியோகத்தரான சிவா பிரதர்ஸ் நிறுவனத்திற்கு விற்பனை பிரதிநிதி தேவை.

(மோட்டார் சைக்கிள் வைத்திருப்பது முக்கியம்) (CS 21370) (3/6)

077 772 2215, 077 391 5630



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.